சமூக வன உரிமைகளும் பெருந்தொற்றும்

வழிநடத்தும் கிராம சபைகள்

சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால் இரண்டாவது தொகுதி

கோவிட் 19ம் வன உரிமைகளும் - 5ம் அறிக்கை

அக்டோபர் 2020

உள்ளடக்கம்

அறிமுகம் 1

பின்னணி 4

01. குஜராத்-நர்மதா 5
விளிம்புநிலைச் சமூகக்குழுக்களுக்கு உதவுதல்

02. மகாராஷ்ட்டிரம் - கோண்டியா 8
கூட்டமைப்பால் உறுதிசெய்யப்பட்ட சிறு காடுபடுபொருள்கள் சார்ந்த வாழ்வாதாரங்கள்

03. சத்திஸ்கர் - ராஜனந்தகாவ்ன் 10
கிராம சபைகளின் தலைமையிலான ஆளுகை

04. மகாராஷ்டிரம் - துலே 13
உள்ளூர் தன்னாட்சியும் உணவு இறையாண்மை

05. குஜராத்-கட்ச் 15
ஆயர்களுக்கும் விலங்குகளுக்கும் ச.வ.உ.மே.குழு ஒருங்கமைப்பு

06. மகாராஷ்டரம் - நந்தர்பார் 18
புலம்பெயர்தல் குறைந்தது

07. மேற்கு வங்கம் - அலிப்பூர்துவார் 20
காடுகளைக் காக்கும் சமூகக்குழுக்கள்

08. மத்தியப் பிரதேசம் - தின்டோரி 22
PVTG குழுப் பெண்களின் கோவிட்19 நிவாரண அமைப்புகள்

09. கர்நாடகம் - சாம்ராஜ்நகர் 25
பழங்குடியினர் கூட்டுறவுகளும் அமைப்புகளும்

10. ஒதிசா - நயாகர் 27
வன வளம்பேணல், உணவு பன்மயம்

முக்கியப் பாடங்கள் 30

முடிவுரை 32

குறுக்கம், சொல்லடைவு 34

பங்களித்தோர் 37

1 நர்மதா குஜராத் | 2 கோண்டியா மகாராஷ்ட்டிரம் | 3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர் | 4 துலே மகாராஷ்டிரம் | 5 கட்ச் குஜராத்

அறிமுகம்

6 நந்தர்பார் மகாராஷ்டரம் | 7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம் | 8 தின்டோரி மத்தியப் பிரதேசம் | 9 சாம்ராஜ்நகர் கர்நாடகம் | 10 நயாகர் ஒதிசா

இந்தியா இப்போது கோவிட்19 பெருந்தொற்றால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக உள்ளது. செப்டெம்பர் 30, 2020 அன்று 60 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். பெருந்தொற்றும் நாடடங்கு நடவடிக்கைகளும் ஏழைகளுக்கும் விளிம்புநிலைச் சமூகங்களுக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன; அவர்கள் வாழ்வாதாரங்களையும் வேலைவாய்ப்புகளையும் இழந்தனர்; உணவுப் பாதுகாப்பின்மையும் சமூக பொருளாதாரப் பேரழுத்தமும் ஏற்பட்டுள்ளன. இந்தியாவில் மாநிலம்விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சந்தித்த பேரிடர்கள் உலகளவில் செய்தியாகியபோதும், இந்திய அரசாங்கம் பருவமழைக் கூட்டத்தொடரின்போது, உயிரிழப்பு குறித்தும் வேலையிழப்பு குறித்தும் எந்த தரவுகளும் தம்மிடம் இல்லை என்றும், எனவே எந்த இழப்பீடும் தர இயலாது என்றும் பதிலளித்தது. இப்புலம்பெயர் தொழிலாளர்களில் பழங்குடி இனத்தினரும் பிற மரபார்ந்த கானுறைபவர்களும் (OTFDs) கணிசமானோர் இருக்கவே வாய்ப்புகள் அதிகம்; இவர்களே அடிக்கடி மேலான வாழ்வாதாரத்தைத்தேடி நகரங்களுக்கு இடம்பெயர்கிறார்கள்.

காலப்போக்கில், மரபான சூழலமைப்புகளுக்கான நுழைவு, பயன்பாடு, மேலாண்மை, பேணுதல் ஆகியவற்றுக்கான உரிமைகள் தொல் சமூகங்களுக்கு மறுக்கப்படுவதால் அவர்களுக்கு அவற்றின் மீதான அதிகாரம் முற்றாகப் பறிக்கப்படுகிறது; வளம்பேணுதலுக்கும், இயற்கைசார் வளங்குன்றா வாழ்வாதாரத்துக்கான வழிமுறைகளுக்கும் ஆதரவு இருப்பதில்லை; மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MNREGA) போன்ற நலத்திட்டங்கள் திறம்படச் செயல்படுத்தப்படுவதில்லை; கானுறைச் சமூகங்களின் மரபார்ந்த சூழலமைப்புகள் கடுமையான எதிர்ப்புக்கிடையேயும் பிற தொழில்துறை, சுரங்கப் பணிகளுக்காக மடைமாற்றப்படுகின்றன; பழங்குடியினர்க்கும் பிற மரபார்ந்த கானுறைபர்களுக்கும் இன்னல்தாழாப் புலம்பெயர்தல் உட்படக் கடுமையான பொருளாதார, சமூக, சூழலியல் பெருஞ்சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றன.

ஒரு தொடக்கநிலை மதிப்பீட்டு ஆய்வறிக்கையின் கண்டறிதல்களின்படி, வனங்கள், வளம்பேணுதல், பொருளாதாரம் ஆகியவை குறித்த கொள்கைகளால் கானுறைச் சமூகங்கள் சந்திக்கும் அநீதிகளும் கொடுமைகளும் நலிவுகளும் பெருந்தொற்றின்போது அதிகரித்திருக்கின்றன. பணிக்கால உறுதியின்மை இச்சமூகங்களின் நலிவான நிலைக்கு ஒரு முக்கியக் காரணமாக வெளிப்பட்டிருக்கிறது. கூடுதலாக, மருத்துவ வசதிகளின் கடுமையான குறைபாடும் இன்மையும், மருத்துவப் பணியாளர்களின்மை, தகவலும் விழிப்புணர்வும்

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

அறிமுகம்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

இல்லாமை, மரபார்ந்த மருத்துவ அமைப்புகளின் சிதைவு போல பழங்குடிப் பகுதிகளில் ஏற்கனவே நிலவும் நிலவரங்களால் இப்பெருந்தொற்றுக்கு மேலும் அதிகமாக அவர்களை இலக்காக்கியுள்ளது. பொதுமுடக்கம் பெரும்பாலான பகுதிகளில் சமூகங்களின் உள்ளூர் வாழ்வாதாரங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. கிட்டத்தட்ட 10 கோடி கானுறைவோர்3 பல்வேறு கானக விளைபொருள்களையே உணவு, உறைவிடம், மருந்து, பண வருமானம் ஆகியவற்றுக்குச் சார்ந்துள்ளனர். இவற்றுக்கானச் சேகரிப்புக் காலம் ஏப்ரில் முதல் ஜூன் மாதங்களில் இருப்பதால் பொதுமுடக்கத்தின்போதே நேர்ந்தது.

இத்தனை இடர்களுக்கு இடையேயும், பழங்குடியினரும், பிற கானுறைச் சமூகங்களும் குறிப்பிடத்தக்க நெகிழ்வுறுதியுடன் இப்பேரின்னலை எதிர்கொண்ட விதத்துக்கான நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளும் செய்தியாகியுள்ளன; குறிப்பாக அவர்கள் நடைமுறையிலோ சட்டப்பூர்வமாகவோ அதிகாரம் பெற்றுள்ளபோது இது அதிகம் நிகழ்ந்துள்ளது. பழங்குடியினருக்கும் பிற மரபார்ந்த கானுறைவோருக்குமான வன உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டம் (FRA 2006 - வ.உ.ச.), பட்டியல் பகுதிகளில் ஊராட்சி நீட்டிப்புச் சட்டம் (PESA 1996 - ப.ப.ஊ.நீ.ச.) ஆகிய இரு சட்டங்களும் பழங்குடியினருக்கும் பிற கானுறைவோருக்கும் தங்கள் நிலங்கள் மீதும் வளங்கள் மீதுமுள்ள உரிமைகளை அங்கீகரிக்கும் இரண்டு சட்டங்கள்; இச்சட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் இத்தகைய உதாரணங்கள் அதிகம் உள்ளன. இவ்வுரிமைகள் அங்கீகரிக்கப்படுவது தடைகளைத்தாண்டி, பேரின்னலை எதிர்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.

இந்த ஆவணம் பரவலான பேரின்னலின் போது அதை எதிர்கொள்ளச் சமூகக்குழுக்கள் மேற்கொண்ட வழிமுறைகளைப் புரிந்துகொள்ளும் பொருட்டுப் பல எடுத்துக்காட்டுகளைப் பதிவுசெய்துள்ளது. சமூகக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கல், குறிப்பாக பணிக்காலத்தை உறுதிப்படுத்துவதும் இயற்கை வளங்களை ஆளுகை செய்யவும் மேலாண்மை செய்யவும் அதிகாரம் வழங்குதலும் சூழலமைப்புகளை மீட்டெடுத்து, வளங்குன்றாப் பொருளாரத்தையும், கோவிட்19 பெருந்தொற்று போல இயற்கையாகவோ மனிதத்தலையீட்டாலோ விளைந்த பேரிடர்களைச் சமாளிக்கும் சமூக நெகிழ்வுறுதியையும் உருவாக்கும்; இப்புரிதலை இந்த நிலையாய்வுகளில் காணும் உதாரணங்கள் வழங்கக்கூடும்.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

அறிமுகம்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா



*இந்திய அரசியலமைப்பின் ஐந்தாவது இணைப்புப் பட்டியலின்படி, இந்தியாவின் ஒன்பது மாநிலங்களில் பழங்குடியின மக்கள்தொகை அதிகமாகவும், பொருளாதாரத்தில் பின்தங்கியும் உள்ள பகுதிகள் பட்டியல் பகுதிகள் எனப்படுகின்றன. ஐந்தாவது பட்டியல் பகுதிகளில் PESA, 1996 செயல்படுத்தப்படும்போது கிராம சபைகளுக்கு சுய ஆளுகைக்கான அதிகாரத்தை வழங்குகிறது.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

பின்னணி

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

பழங்குடியினருக்கும் பிற மரபார்ந்த கானுறைவோருக்குமான வன உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டம் (FRA 2006 - வ.உ.ச.) இந்தியத் தொல்குடிச் சமூகங்களின் நீண்டகாலப் போராட்டங்களுக்குப் பின்னர் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டது. வனவுரிமைச் சட்டம் பழங்குடியினருக்கும் பிற மரபார்ந்த கானுறைவோர்க்கும் இழைக்கப்பட்டுள்ள வரலாற்று அநீதியை அங்கீகரித்து, அவர்களது உரிமைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.இச்சட்டம் வனப்பகுதிகளில் பயிர்செய்யப்படும் நிலங்களுக்கான தனியுரிமையையும், பொது வளங்களின் மீதும் வாழிடங்களின் மீதுமான சமூக உரிமைகளையும் வழங்குகிறது. கானக சூழலமைப்புகள் நீடிப்பதற்கு கானுறை சமூகங்களின் அவசியத்தை வனவுரிமைச் சட்டம் அடையாளம் காண்கிறது; உயிரிப் பன்மயம் பேணவும், சூழலியல் சமநிலையைக் காக்கவும் அவர்களிடம் உரிமைகளையும் பொறுப்புகளையும் வழங்கவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறது; இதனால் வளம்பேணும் கட்டமைப்பு வலுப்பட்டு அவர்களது வாழ்வாதாரங்களும் உணவுப்பாதுகாப்பும் உறுதிசெய்யப்படுகிறது.

சமூகக்குழுக்களின் வனவள உரிமைகள் (CFR - ச.வ..உ.) என்பவை பழங்குடியினருக்கும் பிற மரபார்ந்த கானுறைவோர்க்கும் கிராமங்களின் வழக்கமான எல்லைகளுக்குள் அமைந்த மரபுவழியாக வரும் பொதுக் கானக நிலங்கள் மீதான உரிமைகளையும், காப்புக் காடுகள், பாதுகாக்கப்பட்ட காடுகள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் போன்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உட்பட்ட நிலப்பகுதிகளின் பருவகால பயன்பாட்டுக்கான உரிமைகளையும் உள்ளடக்கியன. வனவுரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) (i) 'பழங்குடியினரும் பிற மரபார்ந்த கானுறைவோரும் வழிவழியாக வளங்குன்றாப் பயன்பாட்டுக்காகப் பாதுகாத்துப் பேணிவரும் சமூகக் கானக வளங்களைப் பாதுகாக்கவும் மீளுருவாக்கவும் பேணவும் மேலாண்மை செய்யவுமான உரிமைகளை' அவர்களிடம் வழங்குகிறது. பிரிவு 5 தமது ச.க.உ.வில் பன்மயத்தையும், இயற்கை வளங்களையும், கானுயிர்களையும் நீர்வளங்களையும், பிற பண்பாட்டு ஆன்மிக வளங்களையும் காத்து, பேணி, மேலாண்மை செய்வதற்கும் அந்த வளங்களுக்கு தீங்குதரும் எந்த நடவடிக்கைகளையும் தடுப்பதற்கான உரிமைகளையும் பொறுப்பினையும் கிராம சபைகளுக்கு வழங்குகிறது.

கிராம சபைகள் உள்ளூர் தன்னாட்சியின் அடிப்படை அலகு. குறைந்தது மூன்றில் ஒரு பங்கேனும் பெண்களைக் கொண்டிருக்கவேண்டிய கிராம சபைகளுக்கு வனவுரிமைச் சட்டத்தின்படி உரிமைக்கோரல்களைப் பற்றி முடிவுசெய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, கிராம சபைகளுக்கு சிறு நீர்வளங்களையும் (பகுதி 4(j)), சிறு கானக உற்பத்திகளையும் (பிரிவு 4 m (vii)) கட்டுப்படுத்தி, திட்டமிட்டு மேலாண்மை செய்யும் அதிகாரமும் கிராம சபைக்கு உள்ளது. பட்டியல் பகுதிகளில் ஊராட்சி நீட்டிப்புச் சட்டத்தின் (PESA 1996 - ப.ப.ஊ.நீ.ச.) பிரிவு 4(d) சமூக வளங்களைப் பாதுகாக்கும் திறன் கிராம சபைகளுக்கு உண்டு என்கிறது. எந்தவொரு நிதியும் பெறப்பட்ட கணக்கை கிராம சபைகள் பராமரிக்கின்றன - அது தன்னார்வப் பங்களிப்புகளாகவோ, சிறிய வன விளைபொருட்கள் சிறு கனிமங்கள் ஆகியவற்றின் விற்பனையாகவோ, ஏதேனும் அதிகாரப்பகிர்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகளாகவோ இருக்கலாம். இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கான உரிமைகள் கிராம சபையின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

சமூக வனவள உரிமை மேலாண்மைக் குழுக்கள் (CFRMCs - ச.வ.உ.மே.கு.) கிராம சபைகளால் பிரிவு 5, விதி எண் 4(1)(e)ன்படி கானுயிர்களையும், வனங்களையும், பன்மயத்தையும் பாதுகாப்பதற்காக அமைக்கப்படுகின்றன. சமூக வன வளங்களைப் பேணுவதற்கும் மேலாண்மை செய்வதற்குமான திட்டங்களை வகுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள இக்குழுக்களை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்தும் உரிமையை விதி 4(1)(f) கிராம சபைகளுக்கு வழங்குகிறது.

கருப்பொருள்கள்

கிராம சபை ஆளுகை, விளிம்புநிலைச் சமூகக்குழுக்களுக்கு உதவுதல், காடுகளைக் காத்தல்

(இ) பழங்குடிச் சமூகங்கள் தங்களது ச.வ.உ.மேலாண்மைத் திட்டங்களை அமைக்கின்றனர்; (வ) சமூக வன வளங்களை வரையறுக்கின்றனர்

இக்குறிப்பு நர்மதா மாவட்டத்தின் தேதியபதா வட்டாரத்தின் கீழ்க்கோடியல் உள்ள 24 கிராமங்களைப் பற்றியது. இக்கிராமங்கள் அனைத்துமே முழுக்கமுழுக்கப் பழங்குடி கிராமங்கள்; வசவா இனக்குழு மக்களைக் கொண்டவை; இரண்டு கிராமங்களில் மட்டும் தட்வி இனக்குழுக் குடும்பங்கள் சில உள்ளன. இக்கிராமங்கள் சூல்பனேஷ்வர் சரணாலயத்தின் பகுதியாகவும் உள்ளன; இது 1982, 1987, 1989 ஆகிய ஆண்டுகளில் மூன்று கட்டங்களில் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது; இங்கு 61,542.4 ஹெக்டேர் காட்டு நிலப்பரப்பில், மக்கள் யாருமற்ற 25 கிராமங்கள் உட்பட 104 கிராமங்கள் உள்ளன.

வனத்துறையாலும் அங்குள்ள ஒரு காகிதத் தொழிற்சாலையாலும் பல பத்தாண்டுகளாக இச்சமூகங்கள் வன்முறையைச் சந்தித்து வந்தன. வன உரிமைச் சட்டம் 2006 இயற்றப்பட்ட பிறகுதான் மக்கள் மாற்றத்துக்கான வாய்ப்பினைக் காணத்தொடங்கினர். 2013-14ல், நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, இக்கிராமங்களின் கிராம சபைகள் இக்கிராமங்களின் 19,220 ஹெக்டேர் காடுகள் முழுமையிலும் இருந்த அனைத்து சமூக வனவள உரிமைக் கோரல்களுக்கும் அதிகாரப் பத்திரங்கள் (titles) பெற்றன. குஜராத்தின் பிற மாவட்டங்களைப் போலன்றி, இந்த அதிகாரப் பத்திரங்கள் வனவுரிமைச் சட்டத்தின் அத்தனை நிபந்தனைகளையும் விதிகளையும் கடைப்பிடிக்கின்றன. இந்த சமூக வனவள உரிமை (ச.வ.உ.) அதிகாரப்பத்திரங்கள் பெற்ற பிறகு, கிராம சபைகள் புதிய சமூக வன உரிமை மேலாண்மைக் குழுக்களைத் (CFRMCs - ச.வ.உ.மே.கு.) தேர்ந்தெடுக்கவோ, பழைய குழுக்களை அங்கீகரிக்கும் தீர்மானிங்களை நிறைவேற்றவோ செய்தன; ஒவ்வொரு குழுவிலும் மூன்றிலொரு பங்கு பெண்கள் உள்ளனர்.

2020ம் ஆண்டு மார்ச் மாத மத்தியிலிருந்து ஜூன் மத்திவரையில் பெரும்பாலான குடும்பங்கள் தலா ஏறத்தாழ 50000 ரூபாய் இழந்தனர். பொதுமுடக்க மாதங்கள் இச்சமூகங்கள் விளைநிலங்களிலும் பிற சிறு தொழிற்சாலைகளிலும் பணியாற்றப் புலம்பெயரும் பருவத்தில் அமைந்தன; அங்கு அவர்கள் 20000 முதல் 40000 ரூபாய்க்கும் மேலாக ஊதியம் ஈட்டியிருப்பார்கள்; தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிடைத்திருக்கக்கூடிய 5000ரூபாய் பணத்தையும் அவர்கள் இழந்தனர். குளிர்காலப்

பயிர்கள் - குறிப்பாக மக்காச்சோளம், பச்சைப் பயிர், பிற காய்கறிகள் ஆகியவற்றின் விற்பனையிலும் பெரும் இழப்பு ஏற்பட்டது; எப்போதும் கிடைக்கும் விலையின் பாதி விலைக்கே அவர்கள் விற்கவேண்டியிருந்தது.

மார்ச் முதல் ஜூன் வரையிலான காலம் காடுபடு பொருள்களைச் (சிறு வன மகசூல்) சேகரிக்கவும் அறுவடை செய்யவும் ஏற்ற முக்கியமான காலம். மூங்கிலும் கருங்காலி இலைகளும் பிப்ரவரி முதல் மே மாதம் வரை வெட்டிச்சேகரிக்கப்பட வேண்டிய காடுபடு பொருள்கள். பல கிராமசபைகளிடம் நடப்பு ஆண்டும் கடந்த ஆண்டும் அறுத்துச் சேர்த்த மூங்கில் குவியல்கள் இருந்தன. காகித ஆலை அவற்றை எடுத்துச்செல்வதாக இருந்தது. ஆனால் கொரோனாத் தொற்று ஏற்பட்டுத் திடீரென்று பொதுமுடக்கம் நேர்ந்தது. பல கிராம சபைகளும் குடும்பங்களும் பெரும் இழப்பைச் சந்தித்தன. அதேபோல, வனவளர்ச்சிக் கழகமும் கிராம சபைகளும் கருங்காலி இலைகளின் ஏலத்தையும் விற்பனையையும் மேற்கொள்ள இயலவில்லை. அதனால், பல குடும்பங்கள், குறிப்பாகப் பெண்கள், கருங்காலி இலைகளின் விற்பனை மூலம் ஒவ்வொரு பருவத்திலும் கிடைக்கும் குடும்ப வருமானமான 5000-10000ரூபாய் வரை இழந்தனர். பிற காடுபடு பொருள்கான வேங்கை (Pterocarpus Marsupium), சீரந்தில்கொடி (Tinospora Cordifolia), தான்றி (Terminalia bellirica) ஆகியவற்றின் விதைகளின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தையும் சில குடும்பங்கள், குறிப்பாக பெண்களும் குழந்தைகளும், இழந்தனர்.

பொதுமுடக்கம் பெரும் பொருளாதார இழப்புகளை விளைவித்தபோதும், கிராம சபைகள் அதிகாரப்பரவல் பெற்ற அமைப்புகளாகச் செயல்பட்டதும் இதுவே முதல்முறை. ஒவ்வொரு கிராமத்திலும், சில குடும்பங்கள், குறிப்பாக கோவலியர்களும் (ஆயர்கள்) இளங்குழந்தைகளைக் கொண்ட விதவைப்பெண்களும், ஒரு நாளைக்கு இருவேளை உணவுகூட கிடைக்கச் சிரமப்பட்டன. இக்குடும்பங்கள் நிலத்தை அறுவடை செய்யும் வழக்கமற்றவர்கள்; தமது உழைப்பையும் காடுபடு பொருள்களின் சேகரிப்பையும் விற்பனையையும் சார்ந்திருப்பவர்கள். ச.வ.உ.மே.கு. உறுப்பினர்களும் பிற கிராமத் தலைவர்களும் இத்தகைய குடும்பங்களை அடையாளம் காணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். எல்லா கிராம சபைகளும் அதிக வருமானம் கொண்டவையாக இல்லாதபோதும், இக்குடும்பங்களுக்கு உணவுத் தானியங்களைத் தாமே வழங்க முடிவு செய்தன; பிறகு, ஆர்ச் வாகினி என்ற சேவை நிறுவனத்தை அணுகியபோது, அவர்கள் 116 குடும்பங்களுக்கு எண்ணெய், நறுமணப் பொருள்கள் உட்பட மூன்று மாதத்துக்குத் தேவையான உணவுவகைகளை அளித்தனர்.

கிராம சபைகளால் பொதுமுடக்கத்தின்போது பெரிய கூட்டங்களை நடத்தமுடியாவிட்டாலும், சில கிராம சபைகளின் ச.வ.உ.மே.கு. உறுப்பினர்கள் முந்தைய விவாதங்களின் அடிப்படையில், கிராம சபை நிதி மூலம் வரவழைத்த டிராக்டர்களைக் கொண்டு ஒவ்வொரு குடும்பத்தின் தனிப்பட்ட நிலத்திலோ வனவுரிமைச்சட்ட நிலத்திலோ குறிப்பிட்ட நேரத்துக்குப் பணியாற்றி நிலம் சமப்படுத்தும் வேலையைச் செய்தனர். பொதுமுடக்கத்தின் போது, இக்கட்டான தருணத்தில் காடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று நினைத்ததால், பெரும்பாலான கிராம சபைகளும் ச.வ.உ.மே.கு.களும் தங்களது சமூக வனவள உரிமைகளைத் தொடர்ந்து பாதுகாத்து வந்தனர். இதன் பொருட்டு, 3-4 பேர் கொண்ட குழுக்களில் காவலுலாச் சென்று, பொதுமுடக்கத்தின் போது எடுக்கப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்து வந்தனர்.

விளிம்புநிலைச் சமூகக்குழுக்களுக்கு உதவுதல்

1980கள் முதல் சமூகக்குழுக்களுடன் பணியாற்றிவரும் ஆர்ச் வாகினி என்ற அமைப்பின் உறுப்பினரான துருப்தி மேத்தா கூறினார்: *"இதுநாள்வரை, கடுமையான பாதைகளில் தங்களது வழியை இவர்கள் அமைத்துக்கொண்டனர். ஆனால் 2020ம் ஆண்டு நிகழ்ந்துள்ள கோவிட்19 பெருந்தொற்று போல தங்கள் கற்பனைக்கும் கட்டுப்பாட்டுக்கும் முற்றிலும் அப்பாலிருந்த இத்தகைய சூழலைச் சமூகங்கள் சந்திக்கநேரிடும் என்று எவரும் கற்பனைகூட செய்ததில்லை! பொதுமுடக்கத்தின்போது பொதுவாகவே மக்களின் நிலை மோசமாக இருந்ததற்குக் காரணம் இல்லங்களில் உணவு இல்லை என்பதன்று; மிகச்சில குடும்பங்களைத்தவிர பிறர் பல வழிகளில் அவர்களுக்குக் கிடைத்து வந்த ஆண்டு வருமானத்தில் பாதியை இழந்தனர் என்பதே காரணம். எனினும், காட்டு வளங்களை மேலாண்மை செய்து பாதுகாப்பதில் கிராம சபைகள் ஈடுபட்டது இதுதான் முதல்முறை; உண்மையில், அப்பொறுப்பு இப்போதுதான் அவர்களுக்கு நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழிமுறைகளை ஜனநாயக முறையிலும் வெளிப்படையாகவும் செயல்படுத்தி காட்டு மேலாண்மையையும் பாதுகாப்பையும் அவர்கள் தொடர்ந்து செய்வார்களா என்பதே மிகப்பெரிய சவாலாக உள்ளது."*

சமூகக்குழுக்கள் தங்கள் ச.வ.உ.பகுதிகளில் உள்ள ஓடை வடிகால்களை நிர்வகிக்கின்றனர்

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

கூட்டமைப்பால் உறுதிசெய்யப்பட்ட சிறு காடுபடுபொருள்கள் சார்ந்த வாழ்வாதாரங்கள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கருப்பொருள்கள்
சிறு காடுபடுபொருள்கள் சார்ந்த வாழ்வாதாரங்கள், கிராம சபைக் கூட்டமைப்பின் ஆளுகை

(இ) கானுறைவோர்கள் கருங்காலி இலைக் கட்டுகளைத் தயாரிக்கின்றனர்; (வ) முகக்கவசம் அணிந்த பெண்கள் போதிய இடைவெளிவிட்டு சிறு காடுபடுபொருள்களைச் திரட்டுகின்றனர்

கோண்டா மாவட்டத்தில், 75% மக்கள் பழங்குடிகள்தாம், குறிப்பாக கோண்ட், ஹல்பா பழங்குடியனர். இங்கு, 250க்கும் மேற்பட்ட கிராமங்களில் சமூக வனவள உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன; தியோரி வட்டத்தில், 29 கிராமங்கள் தமது சிறு காடுபடுபொருள்களைச் சேகரிக்கவும், விற்கவும் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். கிராம சபைகளுக்கு ஆதரவும் உதவியும் நல்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையாக இக்கூட்டமைப்பு செயல்படுகிறது. 29 கிராமங்களிலிருந்தும் வந்த இரண்டு பிரதிநிதிகளால் (தலைவர், செயலாளர்) இது நிர்வகிக்கப்படுகிறது. பருவகாலத்தில் கானுறைவோருக்கு 11 நாள்களுக்கும் பணிக்கான ஊதியம் வழங்கப்படுவதை இக்கூட்டமைப்பு உறுதிசெய்கிறது; வனத்துறையோ கருங்காலி இலைச் சேகரிப்பாளர்களுக்கு 2-3 நாள் வேலைக்கான கூலியைத் தருவார்கள். மேலும், கருங்காலி இலைச் சேகரிப்பாளர்களுக்கு வனத்துறை ஒரு நாளைக்கு 220ரூபாயும், பருவகால மிகையூதியமாக 25ரூபாயுமே தருவார்கள்; கூட்டமைப்பு நாளைக்கு 300ரூபாயும், பருவகால மிகையூதியமாக 200ருபாயும் தருகின்றது.

மார்ச் 2020ல், பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன், தியோரி வட்டத்திலுள்ள கிராம மக்கள், குழுக்களாகக் கூடுவதில் இருந்த சிக்கலால், கருங்காலி இலைகளையும் இலுப்பை விதைகளையும் சேகரிக்கும் செயல்முறை குறித்துக் குழப்பம் கொண்டனர்.

தமதிதோலா ச.வ.உ.மே.கு.வின் செயலாளரான நாராயண் சலாமே, *"கருங்காலி இலைகளும், இலுப்பையும் எங்கள் சமூக உறுப்பினர்களுக்கு நல்ல வருமானம் தரக்கூடிய ஆதாரங்கள். இலுப்பைச் சேகரிப்புப் பருவகாலத்தில் குடும்பத்துக்கு 15-20,000ரூபாயும், கருங்காலி இலைகளிலிருந்து குடும்பத்துக்கு 10-20,000ரூபாயும் சராசரியாகக் கிடைக்கும். கருங்காலி இலைச் சேகரிப்பு 11 நாள்களுக்கு நீடிக்கும். இலுப்பைச் சேகரிப்பு 30 நாள்கள் நீடிக்கும். ஒவ்வொரு குடும்பமும் பருவகாலத்தில் தலா 30-40,000ரூபாய் வரை ஈட்டுகின்றன. கருங்காலி இலைகள் கூட்டமைப்பின் மூலமாக விற்கப்படுகின்றன. இலுப்பையைத் தாமே விற்கின்றனர். பொதுமுடக்கத்தின்போது, இலுப்பையின் விலை, ஆரம்பத்தில் கிலோ 30ரூபாய்க்கும், ஏப்ரில் மாதத்தில் கிலோ 60ரூபாய்க்கும் விற்பனையாகியது,"* என்றார்.

இப்பொருள்களின் சேகரிப்பின் மூலம் மக்கள் ஈட்டும் வருமானம் தங்களது தனிப்பட்ட தேவைகளுக்கும், பிற விவசாயப் பணிகளுக்கும், பணியாளர்களுக்குக் கூலிதரவும், நெல் அறுவடைக்கும் பயன்படுகிறது. பொதுமுடக்கத்தின்போது, 29 கிராமங்களிலும் 5069 குடும்பங்களைச் சேர்ந்த அனைத்து ஆண்களும் பெண்களும் காடுபடு பொருள்கள் சேகரிப்பில் ஈடுபட்டு அதற்கான ஊதியமும் பெற்றனர். இப்பருவகாலத்தில், வணிகர்கள் பொருள்களை வாங்கவந்தபோது, சேகரிப்பு மையம் கிராமத்தின் வெளிப்புரத்தில் அமைக்கப்பட்டது. மேலும் மக்கள் கைகழுவுதல் சமூக இடைவெளி ஆகியவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்தனர்.

பொதுமுடக்கத்தின் போது, 29 கிராமங்களின் கூட்டமைப்பு கருங்காலி இலை விற்பனை மூலம் 2.5 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியது; அவர்களே அனைத்தையும் நிர்வகித்து, கோவிட்19 பரவலுக்கெதிராக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செயல்பட்டனர். மேலும் 2017ம் ஆண்டில் கருங்காலி இலை விற்பனையில் கிடைத்த கணிசமான லாபத்தைப் பயன்படுத்தி, கிராமங்களில் மழைநீர்ச் சேகரிப்புக்காக ஏரிகளை வெட்டுவதற்கான இயந்திரங்களை வாடகைக்கு எடுத்தது. இப்பகுதிகளில் நிலத்தடி நீர் மறுஊட்டம் பெற்று, கிராம மக்கள் நெல் சாகுபடியில் கவனம் செலுத்தமுடிந்தது. விதர்பா இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு (VNCS) என்ற சேவைநிறுவனம் நிவாரணப் பொருள்கள் வழங்க வந்தபோது, இச்சமூகம் தன்னிறைவு பெற்றதாக உணர்ந்து, அப்பொருள்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

கானுறையும் பெண் ஒருவர் அன்றைய தினத்தில் திரட்டிய கருங்காலி இலைகளுடன் இருக்கிறார்

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

கிராம சபைகளின் தலைமையிலான ஆளுகை

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கருப்பொருள்கள்

சமூகக் காடுகள் நிர்வாகம், காட்டுணவுப் பொருள்கள், சிறு காடுபடு பொருள்சார் வாழ்வாதாரங்கள், தகவமைப்பு முறைகள்

(இ) இலுப்பைப் பூக்களை பெண்கள் தூய்மை செய்கின்றனர்; (வ) பாதுகாப்பான இடைவெளிவிட்டு சமூகத்தினர் அன்றாட ச.வ.உ.மேலாண் பணிகளைச் செய்கின்றனர்.

“கிராம சபைகள் எல்லாக் குடும்பங்களுக்கும் உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்தன. எல்லாருக்கும், குறிப்பாக மிகவும் விளிம்புநிலையில் இருந்தவர்களுக்கு, எத்தனை உணவு வேண்டும் என்பதையும் கணக்கிட்டன. உலரந்த, சமைத்த உணவை எல்லாருக்கும் இலவசமாக ஏற்பாடு செய்தன. பல புலம்பெயர் பணியாளர்கள் வீடு திரும்பிக்கொண்டிருந்ததால், இம்மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, உணவும் வழங்கப்பட்டது,” என்று கிராம சபைகள் எப்படி கோவிட்டைச் சமாளித்தன என்வதைப் பற்றிக் கூறினார், சிருஷ்டி என்ற சமூக ஆதரவு அமைப்பில் உறுப்பினராக இருக்கும் கேசய் குர்னுலே.

அம்பாகர் சௌக்கி என்பது சத்திஸ்கர் மாநிலத்தின் ரஜனந்தகாவன் மாவட்டத்தில் உள்ள ஒன்பது வளர்ச்சி வட்டங்களில் ஒன்று. இந்த வளர்ச்சி வட்டத்தில் பெரும்பாலான மக்கள் பழங்குடியினர்: கோண்ட், கன்வர், ஹர்பா, பைகா போன்றவர்கள். இவர்கள் காடுகளையும் விவசயாயத்தையுமே நம்பியுள்ளனர். 2012-13ல், பங்கிரி, கைரி, கேசல்தபரி, பதாகி, சோனலி, துரேடொரா ஆகிய கிராமங்கள் சமூக வனவள உரிமை அங்கீகாரச் சான்றிதழ்களை கூட்டு வன மேலாண்மை குழுக்களின் பெயரில் பெற்றனர் (கூ.வ.மே.கு. - இவை காடுறை சமூகங்களையும் வனத்துறையையும் உள்ளடக்கியவை). இவ்வுரிமைகளின்படி சிறு காடுபடு பொருள்கள், மேய்ச்சல், நிஸ்தார் (*மன்னராட்சி, ஜமீன் காலங்களில் வழங்கப்பட்ட சமூக உரிமைகள்*) ஆகிய உரிமைகள் பெறப்பட்டன.

கிராம சபைகள் கூ.வ.மே.கு. திட்டத்தை நிராகரித்துவிட்டு, சுதந்திரமாக சமூக வனவுரிமை மேலாண்மைக் குழுக்களை (ச.வ.உ.மே.கு. - *இவை முழுக்க பழங்குடியினரையும் காடுறைவோரையும் கொண்டு சமூக வன வளங்களை நிர்வகிக்க வழிநடுத்துபவை*) அமைத்து, தங்கள் உரிமைகளை நிலைநாட்டி, காடுகளைக் கண்காணித்து, சமூக வனவள உரிமைப் பாதுகாப்பைச் செய்தன. ச.வ.உ.மே.குழுக்களின் மூலமாக சரியானபடி சமூக வனவள உரிமைகள் செயல்படுத்தப்படுவது இம்மாவட்டத்தில் எப்போதும் முக்கயமானதாக இருந்திருக்கிறது.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

கிராம சபைகளின் தலைமையிலான ஆளுகை

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கோவிட்19 பொதுமுடக்கத்தின்போது, கிராம சபைகளால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட மேலாண்மைத் திட்டத்தின்படி இச்சமூகம் தனது சமூக வனவள உரிமைகளைப் பயன்படுத்தியது. அதே வேளையில், கிராம சபைகள் கோவிட் பொதுமுடக்க நிர்வாகச் செயல்முறையைத் தொடங்கி வழிநடத்தின. கிராம சபைகளின் முன்னெடுப்பையே பிறகு அரசாங்கமும், காவல்துறையும், வனத்துறையும், சுகாதாரத் துறையும் பின்பற்றி ஆதரவு வழங்கின. சொல்லப்போனால், கிராம சபைத் திட்டங்கள் உள்ளூர், காடுசார் உணவுப்பாதுகாப்பை ஊக்குவித்து சந்தைகளில் கூட்டம் கூடுவதைத் தவிர்த்ததால் உள்ளூர் நிர்வாகம் அவற்றைப் பாராட்டி ஆதரவு நல்கினர். காட்டுப் பாதுகாப்பும் பேணுதலும், சிறு காடுபடு பொருள்களின் சேகரிப்பும் விற்பனையும், உணவுப் பாதுகாப்பும் வினியோகமும், வாழ்வாதார மேலாண்மை ஆகியவற்றைச் சார்ந்து கிராம சபைகள் திட்டங்கள் வகுத்தன என்பதை நாம் காணலாம்.

கோவிட்19 பெருந்தொற்றாக அறிவிக்கப்பட்டு, நாடுதழுவிய பொதுமுடக்கம் அறிவிக்கப்படும் முன்னரே, கிராம சபைகள் முழு முடக்கத்தை அறிவித்தன. ஆனால், விரைவிலேயே சமூகக்குழுக்கள் மளிகைப் பொருள்கள், மருந்துகள், காய்கறிகள் ஆகியவற்றைப் பெறுவதில் பல சிரமங்களைச் சந்தித்தன. எனவே, கிராம சபைகள் இந்த இடர்ப்பாட்டினை ஓர் ஒன்றுபட்ட செயல்முறை மூலம் சமாளிக்க முடிவுசெய்தன. வீடுகளைச் சுற்றி வளர்ந்துள்ள மூலிகைகளையும், விவசாய நிலத்தின் காய்கறிகளையும், கானகக் காய்கறிகளையும் வழங்குவதற்கும், சந்தைகளுக்கு கிராம மக்கள் செல்வதைத் தடை செய்யவும் ஒரு முறையை உருவாக்க முடிவுசெய்தன. கிராமக்கடைகளுக்கு மட்டும் சில மளிகைப்பொருள்களும் மருந்துகளும் கொண்டுவர கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. நோயுற்றவர்களோடு முதலுதவி வண்டியில் நகரத்துக்கு இரண்டு பேர் துணைக்குச் செல்வது என்றும் தீர்மானித்தனர்.

சமூக வனவுரிமை மேலாண்மைத் திட்டங்களின் பகுதியாகவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் பகுதியாகவும், ஒரு கானகக் குளமும், நிஸ்தார் குளமும் அமைக்கப்பட்டு, இக்குளங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்த மீன்பிடிப்புத் தொழில்கள் தொடங்கப்பட்டன. அதே சமயம், கருணைக்கிழங்கு (*Amorphophallus paeoniifolius*), சேம்பு (*Colocasia esculenta*), கோஸ்தம் (*Costus speciosus*) ஆகிய நாட்டுச் செடிகள் நடப்பட்டன.

சமூக வனவுரிமை மேலாண்மைக் குழுக்கள் கிராம மக்களுக்கு அடையாள அட்டைகளையும் கடவுச்சீட்டுகளையும் வழங்கி கானகப்பொருள்களை தினமும் சேகரிக்க வழிவகுத்தன. தினசரிப் பயன்பாட்டுக்காக, ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் மூன்று பெண்களுக்கும் மூன்று ஆண்களுக்கும் காடுகளின் குறிப்பிட்ட பகுதிகள் பழங்கள், மலர்கள், கிழங்குகள், காய்கறிகள், விறகுகள், தீவனப்புல் ஆகியவற்றைச் சேகரிப்பதற்காக ஒதுக்கப்படவேண்டும் என்று முடிவுசெய்தன. இலுப்பைப் பழங்களும் மலர்களும் (*Madhuca longifolia*), சிரோஞ்சி (*Buchanania lanzan*), கருங்காலி இலைகள் (*Diospyros melanoxylon*) ஆகிய சிறு காடுபடு பொருள்களின் சேகரிப்புக்கான திட்டத்தை இக்குழுக்கள் வகுத்தன. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் இரண்டு நபர்களுக்கு கானகத்தில் ஒரு குறிப்பட்ட பகுதியை ஒதுக்கினர்; ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிந்து, ஒவ்வொரு குடும்பத்தின் சேகரிப்புப் பகுதிக்கிடையேயும் 10 மீட்டர் இடைவெளியைக் கடைப்பிடித்தனர்.

கிராமத்துக்கு வெளியிலிருந்த சந்தைகளுக்குச் செல்வது தடைசெய்யப்பட்டது. கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்தும் கட்டுப்படுத்தப்பட்டது. காடுகளுக்குள்ளிருந்த அனைத்துப் பாதைகளும் அடைக்கப்பட்டு, காட்டுக் கிழங்குகளையும், கனிகளையும், பிற காடுபடு பொருள்களையும் வெளியாட்கள் கடத்திச் செல்வதை சமூகக்குழு கண்காணித்தது. இவ்வழிகளில், காடுகளில் கூட்டம் சேர்வது தவிர்க்கப்பட்டு, சமூகக்குழு உறுப்பினர்கள் காடுகளின் வெவ்வேறு பகுதிகளில் கடத்தல் நிகழாமல் தடுக்க முடிந்தது.

காடுபடு பொருள்களின் சேகரிப்பிலும் உணவு வினியோகத்திலும் நோய்த்தொற்று ஏற்படாமல் சமூகக்குழுக்களைக் காப்பது முக்கியமானது. கூட்டம் கூடுவதைத் தவிர்க்கப் பொது வினியோக நிலையங்களில் உணவு வழங்குதைத் தடைசெய்வதற்குக் கிராம சபைகள் முடிவெடுத்தன. அதற்குப்பதிலாக, உணவை 48 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்தபிறகு, கிராம ஊராட்சிகள் மூலமாக எல்லா வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்தனர். உணவு வழங்குமுன், கோவிட்19 குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, பொது இடங்களில் சுகாதாரம் சார்ந்த தகவல்களைக் கொண்ட வாசகங்களை எழுதி, ஒலிப்பெருக்கியின் மூலம் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கிராம ஊராட்சிகள் அறிவுறுத்தப்பட்டன.

கொரோனா தொற்று, சமூக இடைவெளி ஆகியவை குறித்த விழிப்புணர்வு வாசகங்களை ஒரு பழங்குடிப் பெண் சுவர்களில் தீட்டுகிறார்.

1 நர்மதா குஜராத் | 2 கோண்டியா மகாராஷ்ட்டிரம் | 3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர் | 4 துலே மகாராஷ்டிரம் | 5 கட்ச் குஜராத்

உள்ளூர் தன்னாட்சியும் உணவு இறையாண்மை

6 நந்தர்பார் மகாராஷ்டரம் | 7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம் | 8 தின்டோரி மத்தியப் பிரதேசம் | 9 சாம்ராஜ்நகர் கர்நாடகம் | 10 நயாகர் ஒதிசா

கருப்பொருள்கள்

உணவுப் பாதுகாப்பு, உணவு இறையாண்மை, பழங்குடி உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மூலமான வாழ்வாதார உருவாக்கம்

பாரிபடா கிராம மக்கள் தங்களது விவசாயம், காடுகள் மூலம் தற்சார்புடன் உள்ளனர்

2017ம் ஆண்டு துலே மாவட்டத்தில் உள்ள மஞ்சிரி கிராம பஞ்சாயத்தின் பாரிபடா கிராமத்தைச் சேர்ந்த 130 கோக்கினி, பீல் பழங்குடிக் குடும்பங்களின் தனிநபர் வனவுரிமைகளும் சமூக வனவள உரிமைகளும் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டன. இங்குள்ள காடுகள் அத்தனை அடர்த்தியானவையல்ல என்பதால் கிராம மக்கள் உழவர்களாக உள்ளனர். ஆண்டு முழுவதும் தானியங்களும் காய்கறிகளும் பயிரிடுகின்றனர்.

பாரிபடா கிராமத்தின் சமூகக்குழு உறுப்பினரும் சமூக சேவை செய்பவருமான சைத்ராம் பவார், *"நகர மக்கள் பெரிய கட்டடங்கள், நாலுருளி வண்டிகள், பெரிய தொலைக்காட்சித் திரை என்பவற்றையே வளர்ச்சி என்று நினைக்கலாம்; பழங்குடி ஊரகப் பகுதியில் உள்ள எங்களுக்கு அது நிலம், காடுகள், உழவு, பண்ணை விலங்குகள், உணவுப் பாதுகாப்பு என்பவைதாம். அனைத்தையும்விட முக்கியமாக, தன்னாட்சி. பாரிபடா கிராம மக்கள் மனிதர்கள், நீர், விலங்குகள், காடு, நிலம் ஆகிய ஐந்து உறுப்புகளுக்கும் இடையே உள்ள இணைப்பினை மதிக்கிறார்கள். கூடுதலாக, நாங்கள் மூன்று மையச் செயல்முறைகளைச் சேர்த்துள்ளோம்: கூட்டு நீர் மேலாண்மை, கூட்டு விவசாயம், கூட்டாகச் சந்தைப்படுத்துதல்."*

சமூகக்குழு விவசாயத்தின் பகுதியாக, இம்மாவட்டத்திலுள்ள 45 கிராமங்களைச் சேர்ந்த 1016 உலர்நில விவசாயிகள் 2014ம் ஆண்டுமுதல் செயல்பட்டுவரும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பின்கீழ் திரண்டுள்ளனர். தேஷ்பந்து அக்ரோ ஆய்வு, உற்பத்தி நிறுவனம் என்ற அந்த நிறுவனம் பழங்குடியினரால் நிர்வகிக்கப்படும் மகாராஷ்டிரத்தின் முதல் பெரிய நிறுவனமாகும். விவசாயிகளுக்குச் சரியான விலையை உறுதிசெய்வதில் அதன் கவனம் குவிந்துள்ளதால் இந்நிறுவனம் இலாபநோக்கற்றதாக உள்ளது. எனினும், இலாபம் அடைந்த ஆண்டுகளில், 30% பெறுதி உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது; மீதமுள்ள

உள்ளூர் தன்னாட்சியும் உணவு இறையாண்மை

தொகை நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வேலைகளுக்காக முதலீடு செய்யப்படுகிறது (எடுத்துக்காட்டாக, அரிசி பக்குவப்படுத்தும் ஆலை நிறுவுவதற்காக நிலம் வாங்க மூதலீடு செய்தனர்).

பாரிபடாவின் கிராம சபை நீண்ட கால வட்டார வளர்ச்சியை நோக்கிப் பணிசெய்துவருகிறது. 7-8 ஆண்டுகளுக்கு முன்னர், கிராம மக்கள் ஒரு கருத்தாய்வு நிகழ்த்தி, கிராமத்துக்கான நுண்திட்டம் ஒன்றை உருவாக்கினர். ஒவ்வொரு குடும்பத்துக்குமான நிலவுடைமையும் நுழைவும், நீர், ஆற்றல், கால்நடைகள், உணவு, பள்ளி செல்லும் குழுந்தைகள், மூத்த குடும்ப உறுப்பினர்கள் ஆகியவற்றையெல்லாம் புரிந்துகொள்வதும் இதில் அடக்கம். இக்கருத்தாய்வின் நோக்கம் உள்ளூர் தீர்வுகளை முன்வைத்து, ஏதேனும் இக்கட்டு வரும்போது கிராம மக்கள் வட்டிக்கடைகளை அணுகுவதைத் தவிர்ப்பதே ஆகும். இந்த நீண்டகாலப் பணியால் இச்சமூகத்தின்மீது கொரோனாப் பொதுமுடக்கம் பெரிய பாதிப்பு ஏற்படுத்தவில்லை.

பல ஆண்டுகளாக, பாரிபடாவின் குடும்பங்கள் காய்கறிகளையும் உணவுப்பொருள்களையும் தங்கள் இல்லங்களின் தேவைக்கு மிகுதியாக உற்பத்தி செய்து சேமித்து வருகின்றனர். எனவே பொதுமுடக்கத்தின்போதும் எந்த உணவுப் பற்றாக்குறையும் ஏற்படவில்லை. பலவகை உணவுகளும் கிடைக்கின்றன. கார்காலத்தில் அரிசி, உளுந்து, தட்டைப்பயிர், கடலை, சோயா, சோளம் ஆகிய பயிர்களையும், பனிக்காலத்தில் கோதுமை, கரும்பு, செங்கீரை, வெங்காயம், மக்காச்சோளம் ஆகியவற்றையும் பயிரிடுகின்றனர். மரபார்ந்த காட்டுக் காய்கறி வகைகளைப் பாதுகாப்பதிலும் இச்சமூகக்குழு ஈடுபட்டுள்ளது. இவற்றை ஆண்டுதோறும் நடைபெறும் வன் பாஜி மகோத்சவத்தின் போது காட்சிக்கு வைத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர். இந்த அறிவு இக்கட்டுகளின்போது பயன்படவும் செய்கிறது. கோவிட் பொதுமுடக்கத்தின்போது, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் ஈடுபட்டுள்ள கிராம சபைகள் 50 டன் அரசியைக் கூட்டாகத் தமது நிறுவத்தின் மூலமாக விற்று, மக்களுக்கு நல்ல வருமானம் ஈட்டித்தந்தன.

கருப்பொருள்கள்

காடு மறுசீரமைப்பு, நீர் மேலாண்மை, வாழ்வாதாரம்

(இ) ச.வ.உ.மே.குழுக்கள் நீர்,வன மேலாண்மைத் திட்டங்களை விவாதிக்கின்றனர்; (வ) ச.வ.உ.மே.குழுக்கள் JCBக்கள் மூலம் சீமைக்கருவேல மரங்களை அகற்றுகின்றனர்

"நாங்கள் 550 ஆண்டுகளாக, எங்கள் எருமைகளுடன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்திய வனவுரிமைச் சட்டம்,1927, பன்னி பாதுகாக்கப்பட்ட காடுகள் குறித்த 1955ம் ஆண்டின் அறிவிப்பு ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டபின் நாங்கள் இடப்பெயர்ச்சியற்ற சோம்பலான வாழ்க்கைமுறையைக் கைக்கொள்ளவேண்டியிருந்தது," என்று நினைவுகூர்கிறார் கோரேவாலே கிராமத்தின் மல்தாரி ஆயரான இஷாபாய். "பின்னர் இந்திய வனத்துறை, ஆக்கிரமித்து வளரும் மரவகையான சீமைக் கருவேல (Prosopis Juliflora) விதைகளை வானிலிருந்து தூவியது. பன்னியில் வனத்துறைப் பிரிவும் ஒரு புதிய பணித்திட்டமும் 2009ம் ஆண்டு தொடங்கப்பட்ட பின்னர், மேய்ச்சல் நிலங்கள் மூடப்பட்டதும் எங்களைப் பாதித்தன. அதன்பிறகு எங்கள் சமூக வனவள உரிமைக் கோரலை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்; அப்பணி இன்னும் நிறைவேறவில்லை," என்று மேலும் கூறுகிறார்.

குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய புல்வெளிகளில் ஒன்றான பன்னி புல்வெளியிலுள்ள மல்தாரிகள் இந்தியாவில் வனவுரிமைச் சட்டத்தின்படி சமூக வனவள உரிமை கோரி வெற்றிகரமாகத் தாக்கல் செய்துள்ள முதல் ஆயர் குடி. சமூக வனவுரிமை கோரப்படும் இடத்தின் பரப்பளவு 2500 சதுர கி.மீ. 1947ம் ஆண்டுக்கு முன்னர், புல்வெளியின் மீதான சார்பு சமூக அடிப்படையிலானதாக இருந்தது - தனிநபர் உடைமை என்று ஏதுமில்லை; புல்வெளியில் எந்த திடமான எல்லைகளும் கிடையாது. 1947ம் ஆண்டு முதல் 1955ம் வரை, பன்னி புல்வெளி வருவாய்த்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1955ம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்பட்டது. 1998ல் மாவட்ட அதிகாரிகள் இப்புல்வெளியின் பொறுப்பினை அதிகாரப்பூர்வமாக வனத்துறையிடம் ஒப்படைத்தனர். அதைத் தொடர்ந்து, இப்புல்வெளிக்கான பொறுப்பாளர் குறித்து ஒரு தெளிவின்மை நிலவுகிறது - வனத்துறையாகட்டும் வருவாய்த்துறையாகட்டும், இரு துறைகளுமே இப்பொறுப்பினை முழுவதும் அங்கீகரிக்காமலும் ஏற்றுக்கொள்ளாமலுமே உள்ளனர்.

ஆயர்களுக்கும் விலங்குகளுக்கும் ச.வ.உ.மே.குழு ஒருங்கமைப்பு

பன்னி பாதுகாக்கப்பட்ட காடுகளில் 19 கிராம ஊராட்சிகளில் 54 காட்டு கிராமங்கள் உள்ளன. 47 கிராமங்களின் சமூக வனவள உரிமைக் கோரலுக்கான ஒப்புதலை மாவட்ட அளவிலான குழு (DLC) வழங்கியுள்ளது. ஆனால் பழங்குடி மற்றும் வனத்துறை அமைச்சரகத்திலும் மாவட்ட ஆட்சியரிடமும் பலதரம் முறையிட்ட பின்னரும் இன்னும் முறையான பத்திரங்கள் வழங்கப்படவில்லை. கிராம சபைகள் ச.வ.உ.மே.குழுக்களை அமைத்துள்ளனர். அக்குழுக்கள் தமது திட்டமிடலின்போது இப்பகுதியின் மூத்தவர்களைக் கலந்தாலோசித்துள்ளனர். அவர்கள் இங்குள்ள பல்வேறு வகையான புல்களைப் பற்றியும் நாட்டுச் செடிகளைப் பற்றியும், மண்வகைகளைப் பற்றியும், கொக்குகள், குள்ளநரிகள், நரிகள் போன்ற வனவிலங்குகளைப் பற்றியும் அறிவார்கள்.

2020ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில், பருவமழைக்கு முந்தைய காலம் மிக முக்கயமானது என்பதால், 15 கிராமங்களின் ச.வ.உ.மே.குழுக்கள் தங்கள் வளம்பேணல், மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் துடிப்பாக இருந்தனர். குறிப்பாகச் சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதில் கவனம் செலுத்தினர்; இவை வேகமாக ஆக்கிரமித்து பிற உள்ளூர் புல்,மூலிகைகளை அழித்துவிடுகின்றன. செர்வோ கிராமத்தில் ச.வ.உ.மே.குழுக்கள் இயந்திரங்களைக் கொண்டு 200 ஹெக்டேர் நிலத்தில் இம்மரங்களை அகற்றின; மிசிரியடோ கிராமத்தில் 150 ஹெக்டேர் நிலத்தில் சுத்தம் செய்தனர். பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டவுடன் ச.வ.உ.மே.குழுக்கள் தமது பணிகளை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று.

பன்னி புல்வெளியை ச.வ.உ.பகுதியாக அறிவிக்கும் புதிய பலகைக்கு அருகில் நிற்கும் மல்தாரி ஆயர்கள்

ஆயர்களுக்கும் விலங்குகளுக்கும் ச.வ.உ.மே.குழு ஒருங்கமைப்பு

மல்தாரி சமூக மக்கள் பெரும்பாலும் நாட்டுவகைக் கால்நடைகளை மேய்ப்பதையே சார்ந்துள்ளனர் - காங்கிரேஜ் மாடுகளும் பன்னி எருமைகளும் பரவலாக உள்ளன. பெரும்பாலான குடும்பங்கள் 50-100 விலங்குகள் வைத்துள்ளனர்; ஒவ்வொரு கிராமத்திலும் 5000 விலங்குகளும், மொத்தப் பகுதியிலும் 1,00,000 விலங்குகளும் உள்ளன. ஆயர் சமூகம் தாங்கள் உற்பத்திசெய்யும் பாலைக் கொண்டே சமாளிக்கமுடியும் என்றபோதும், பலருக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்தகைய சமயங்களில் அண்டைவீட்டினரும் பிற கிராம மக்களும் அவர்களுக்கு உதவி செய்வர். அதே சமயம், வணிகத் தீவனத்தின் விலை அதிகரித்தபோதும், தங்களது புல்வெளிகளை ஆக்கிரமித்த மரங்களைச் சரியான நேரத்தில் அகற்றியதால், அவற்றையே சார்ந்திருக்க முடிந்தது.

பன்னி புல்வெளி மார்ச் முதல் மே மாதம் வரை மிகவும் வறண்டிருப்பதால் அச்சமயத்தில் நீர் மேலாண்மை மிகவும் அத்தியாவசியமானது; அப்போதுதான் பொதுமுடக்கம் ஏற்பட்டது. மனிதர்கள் மட்டுமன்றி ஒரு லட்சம் விலங்குகளும் இதே நீர்நிலைகளைச் சார்ந்திருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் இந்த நீர்நிலைகளில் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. பொதுமுடக்கம் 2.0 நீக்கப்பட்டதும், ச.வ.உ.மே.குழு நிதிகள் மரபார்ந்த நிலத்தடி நீர் ஜீல்களை மறுஊட்டம் செய்யப் பயன்படுத்தப்பட்டன. ஆபாத் என்று கூட்டுப்பணி முறையின் மூலம், மழைநீர் சேமிப்புக்காக சமூகக்குழுக்கள் விராடா என்ற கிணறுகளைத் தோண்டின. ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கட்ச் பகதியில் மழை தொடங்கிவிட்டது. எனினும் பன்னி புல்வெளி, மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், பொதுமுடக்கம் ஆகியவற்றை சரியான நேரத்தில் நிர்வகித்ததால், சமூகம் நல்லபடியாக உள்ளது.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

புலம்பெயர்தல் குறைந்தது

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கருப்பொருகள்கள்
புலம்பெயர்தல் குறைந்தது, சிறு காடுபடு பொருள்கள்சார் வாழ்வாதாரங்கள்

(இ) தமது வனங்களைத் தாமே மேலாண்மை செய்யப் பணியிலமர்த்தப்பட்டுள்ள சமூகத்தினர்; (வ) ச.வ.உ.பகுதிகளில் சமூகத்தினரே உள்ளூர் மர வகைகளை நடுகின்றனர்

நந்தர்பார் மாவட்டம் மகாராஷ்டிரத்தில் மிக அதிக சமூக வனவள உரிமை அங்கீகாரம் பெற்ற இடங்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஏப்ரில் 2018ல், 2,16,723.1 ஏக்கர் நிலத்துக்கு உரிமைப்பத்திரங்கள் சமூகக்குழுக்களிடம் இருந்தன. பூத்யா மரம் (*Sterculia urens*), இலுப்பை மலர்கள் (*Madhuca longifolia*), சிரோஞ்சி/கடப்பா பாதாம் (*Buchanania lanzan*) ஆகியவை இக்காடுகளில் அதிகம் காணப்படுகின்றன. சமூக வனவுரிமை மேலாண்மைத் திட்டங்களின் பகுதியாக, ச.வ.உ.மே.குழுக்கள் கானுறைவோரின் வாழ்வாதாரங்களுக்கு உதவும் மரங்களை மேலும் அதிகமாய் நடுவதற்கு வழகாட்டுகின்றன.

சிறு காடுபடுபொருள்களின் (MFP) கூட்டமைப்புகளாக இச்சமூக ஒருங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் இப்பொருள்களைச் சேகரிப்பவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ச.வ.உ.மே.குழுக்கள் ஒவ்வொரு கூட்டமைப்பிலிருந்தும் காடுபடுபொருள்களைச் சேகரித்து, நல்ல விலையும் மிகையூதியமும் தருகின்றன. காடுபடுபொருள்களை வணிகர்களுக்கு நேரடியாக விற்று, இடைத்தரகர்களைத் தவிர்ப்பதால் இது சாத்தியமாகிறது. பருவக்காலத்தில் எல்லாருடைய வாழ்வாதாரத்தையும் உறுதி செய்யும் வகையில், ஏதேனும் இடர்ப்பாடுகளால் எவரேனும் காடுபடுபொருள்களைச் சேகரிக்க முடியாது போனால், அவர்களுக்கும் நிதி வழங்கி ஆதரவு நல்கவும் இக்குழுக்களுக்கு வழிமுறைகள் உள்ளன.

லோக் சமன்வய் பிரதிஸ்தான் என்று உள்ளூர் சேவை நிறுவனத்தின் உறுப்பினரான பிரதீபா சிண்டே, *"2016 வரை நந்தர்பார் மாவட்டத்திலிருந்து ஏராளமானவர்கள் பணி தேடி புலம்பெயர்ந்து கொண்டிருந்தனர். விவசாய நிலங்களில் ஆறு மாதங்கள் பணியாற்றுவதற்காக வெளியில் சென்றுகொண்டிருந்தனர்; ஆனால் இப்போது அது நின்றுவிட்டது. கோவிட்19 பொதுமுடக்கத்தின்போது காடுபடுபொருள்களைச் சேகரிப்பது, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மரங்கள் நடுவது, நீர்ப்பாசனத்துக்காகவும் பிற நோக்கங்களுக்காகவும் ச.வ.உ.மே.குழுக்கள் மூலம் குளங்கள் கட்டுவது மழைநீர்த் தேக்குவது ஆகியவை வாயிலாக கிராமங்கள்*

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

புலம்பெயர்தல் குறைந்தது

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

வாழ்வாதாரங்களைத் தக்கவைத்திருந்தன. சமூகக்குழுக்கள் தொரன்மால் பகுதியை முக்கிய மையமாகக் கொண்டு இம்மாவட்டத்தில் நீர் மேலாண்மை செய்வதற்கான ஒரு முழுத் திட்டவரைவையும் செயல்படுத்திவருகின்றன. பணியாளர்கள் சராசரியாக 250ரூ முதல் 300ரூபாய்வரை ஒருநாள் ஊதியமாகப் பெற்றனர். கிராமத்திலேயே இருந்துவிடுவதில் பல நன்மைகள் உண்டு - காடுகளை அவர்களால் காக்கமுடிந்தது; குழுந்தைகளின் கல்வியையும் பார்த்துக்கொள்ளமுடிந்தது," என்றார்.

கோவிட்19 பொதுமுடக்கத்தின்போது, நந்தர்பாரில் ச.வ.உ.மே.குழுக்கள் ஒருங்கு செய்யப்பட்டு இந்தோர், மும்பை போன்ற நகரங்களுக்கு கிலோ 70ரூபாய்க்குக் கோந்து விற்கப்பட்டது. கிராம மக்களுக்கு சேகரிப்புப்பணிக்காகக் கிலோவுக்கு 50ரூபாய் கிடைத்தது. இலாபம் ஈட்டியதற்காக கிலோவுக்குப் 10ரூபாய் மிகையூதியமாக வழங்கப்பட்டது. இலுப்பையை கிலோ 50ரூபாய்க்கு விற்று, கிராம மக்களுக்குக் கிலோவுக்கு 40ரூபாயும் இலாபத்திலிருந்து கிலோவுக்கு 5ரூபாயும் வழங்கினர். காடுபடுபொருள்கள் சேகரித்து ஈட்டிய பணத்தைக்கொண்டு பொதுமுடக்கத்தின்போதும் மக்கள் கிராமத்துக் கடைகளிலிருந்து பிற பொருள்களை வாங்கமுடிந்தது.

பல ஆண்டுகளாக, சமூகக்குழுக்கள் காடுபடுபொருள்கள் கிடைக்கும் மர வகைகளை நட்டுவந்துள்ளனர். இந்தப் பொதுமுடக்கத்தின்போது, கிராம மக்கள் எதிர்கால வாழ்வாதாரத்துக்கும் உணவுப்பாதுகாப்புக்கும் உதவும் வகையில் மாமரங்களை நட்டுள்ளனர். இந்த ஆண்டு சமூகக்குழுக்கள் காடுபடுபொருள்களை அறுவடை செய்துள்ளனர்; அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியமும், இலுப்பை, கோந்து ஆகியவற்றை விற்றதால் ஈட்டிய இலாபத்திலிருந்து மிகையூதியமும் கிடைத்துள்ளது. வேறு சில காடுபடுபொருள்களுக்குச் சரியான விலைகிடைக்கக் குழுக்கள் காத்திருக்கின்றன.

(இ) சமூகத்தினர் தமது காடுகளைப் பாதுகாக்கின்றனர்; (வ) பல்வகை காட்டுணவுகளைக் கொண்டு சமைக்கப்படும் உணவுப்பண்டம்

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

காடுகளைக் காக்கும் சமூகக்குழுக்கள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கருப்பொருள்கள்
பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் காடுகளைப் பேணுதல், காடுகளுக்கு சமூகக்குழு ஆளுகை

(இ) கோடல் பஸ்தி கிராம நுழைவாயிலிலுள்ள பலகை சமூக வன உரிமைகளை அறிவிக்கிறது;
(வ) தெற்கு மெண்டபாரி சமூக வன உரிமைகளைப் பிரகடனப்படுத்துகிறது.

மேற்கு வங்க அரசால் சமூக வனவள உரிமைகள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்படாத போதும், மேற்கு வங்கத்தின் அலிப்பூர்துவார் மாவட்டத்திலுள்ள ஜல்தபாரா தேசியப் பூங்கா, புக்சா புலிகள் காப்பகம் ஆகிய இடங்களிலும் அவற்றைச் சுற்றிலும் வாழ்ந்துவரும் ராவா, சந்தால், ஒரோன், மேச், கோச் போன்ற பழங்குடிச் சமூகங்களும் பிற கானுறையும் வன் தெளங்கியா சமூகங்களும் பல ஆண்டுகளாகக் காடுகளில் நுழைந்துகொண்டும் அவற்றைப் பேணிக்கொண்டும் இருக்கின்றனர்.

காலனிய காலத்தில், காட்டு கிராமத்தார் என்றறியப்பட்ட தெளங்கியா இனத்தினர் வணிகப்பயிர்களை விளைவிக்கும் கானக நிலங்களில் கூலியும் உரிமைகளும் இல்லாமல் பணியாற்றிவந்தனர். 2009ம் ஆண்டுவரைக்குமே, வனத்துறையினர் மரங்களை மொத்தமாக வெட்டிவந்தனர்; கிராம மக்கள் எந்த வனவுரிமைகளும் இன்றி அங்கு பணியாற்றினர். ஆனால், வனவுரிமைச் சட்டம்(2006) வந்தபிறகும், 2008ம் ஆண்டுமுதல் பல சமூகக்குழுக்கள் தங்கள் உரிமைக்கோரல்களைத் தாக்கல்செய்யத்தொடங்கியதும், இப்படியான மரம்வெட்டுதல் அருகிவிட்டது.

கோடல் பஸ்தி, வடக்கு மென்டபாரி, தெற்கு மென்டபாரி போன்ற கிராமங்கள் வனவுரிமைகளைக் கோருவதலும், காடுகளைக் கொள்ளையிலிருந்து காப்பதிலும், மீன்கள், விறகுகள், காடுபடுபொருள்கள் ஆகியவற்றைச் சேகரிப்பதிலும், காட்டு வளங்களை நிர்வகிப்பதிலும் பிற கிராமங்களுக்கு முன்னோடிகளாக இருந்து வழிநடத்துகின்றனர். ஜல்தபாரா தேசிய பூங்காவிலுள்ள கோடல் பஸ்தி தான் மேற்கு வங்கத்தில் தங்கள் சமூக வனவள உரிமைகளைத் தாமே பறைசாற்றிக்கொண்ட முதல் கிராமம். சமூக வனவள உரிமைக் கோரலைத் தாக்கல்செய்தபின், 2010ம் ஆண்டு, தங்கள் பகுதியிலிருந்த காடுகளை தமது சமூகக்கழுவே நிர்வகித்துப் பாதுகாக்கிறது என்று ஒரு அறிவிப்புப்பலகையை எழுப்பினர். அதன்பிறகு பல கிராமங்களும் சமூகக்காடுகளின் எல்லைகளை வகுத்து இத்தகைய அறிவிப்புப்பலகைகளை நிறுவத்தொடங்கினர்; கான்கிரீட் பலகைகளைக்கூட வைத்தனர்.

கூட்டு வன மேலாண்மை குழுக்கள் (கூ.வ.மே.கு.) அமைப்பதற்கு வனத்துறை அழுத்தம் தந்தபோதும், அவை வனத்துறைக்குச் சார்பாகவே செயல்பட்டு சமூகத்தின் உரிமைகளை அங்கீகரிப்பதில்லை என்பதால் இந்த கூ.வ.மே.குழுக்களை கிராம சபைகள் நிராகரித்தனர். 2014ம் ஆண்டு, வனவுரிமைச் சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்தி, 99 காட்டுக் கிராமங்கள் வருவாய் கிராமங்களாகப் பதிவு செய்யப்பட்டன. ஆனால் அதிகாரிகளின் அலட்சியத்தால் மக்கள் இன்னும் அவர்களுக்குச் சட்டப்படி சேரவேண்டிய உரிமைகளைப் பெறவில்லை.

2020ம் ஆண்டு மே மாதம், கோவிட்19 பொதுமுடக்கத்தின் தொடக்கத்தில், மேற்கு வங்கத்தின் பல பகுதிகளிலும் அம்ஃபான் புயல் சூரையாடியது. அலிபூர்துவார் மாவட்டத்திலும் பெருமழை இருந்தபோதும், பெரும் சேதாரம் இல்லை. குர்மாய் பஸ்தியின் சுந்தர் சிங் ரவா, *"பல ஆண்டுகளாக, சமூகக்குழுக்கள் தங்கள் சமூக வனவள உரிமைகளைச் செலுத்தி தமது காடுகளைப் பாதுகாக்கவும் வளம்பேணவும் திரட்டப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில், கோடல் பஸ்தி கிராமம் காடுகளைத் திருட்டிலிருந்தும் கொள்ளையிலிருந்தும் காத்திருக்கிறது என்று பெயர் பெற்றது.*

இந்த ஆண்டு, சூறாவளிக் காலம் பொதுமுடக்கத்தின் போது அமைந்தது. எனவே காடுகளில் மிகக்குறைவான மக்களே இருந்தனர். காடுகளில் மக்கள் குறைவாக இருந்ததையும், பிற மாவட்டங்களில் சூறாவளிச் சேதாரம் ஏற்பட்டதையும் சாதாகமாக எடுத்துக்கொண்டு, வனத்துறை காடுகளில் பல மரங்களை வெட்டியது; உண்மையில் மழையால் எங்கள் பகுதியில் 10 மரங்களே விழுந்தன. கோடல் பஸ்தி கிராம மக்கள் தலையிட்டு அவர்கள் வெட்டுவதைத் தடுத்தனர். அண்மை ஆண்டுகளில் உள்ளூர் காவல்துறையினரும் கானுறையும் எங்கள்மீது பரிவு கொண்டுள்ளனர். முன்னர் எப்போதும் காவல்துறை வனத்துறையைக் கேள்வியின்றி ஆதரிப்பார்கள்; காலம் செல்லச்செல்ல, மக்கள் காவல்நிலையத்துக்கு கொண்டுவரப்படும்போது உண்மையில் வனத்துறை ஏழைகளிடம் மிகக்கொடூரமாக நடந்துகொள்கின்றனர் என்றும் அந்த ஏழைமக்கள் காடுகளில் தமக்கிருந்த உரிமைகளைக் தற்காக்கின்றனர் என்று கவனிக்கத்தொடங்கினர்," என்று கூறினார்.

பக்சா புலிகள் காப்பகத்தில் உள்ள கரோபஸ்தி கிராமத்தின் வன் தௌங்கியா சமூகத்தைச் சேர்ந்த லால் சிங் பூஜல் பேசும்போது, *"பொதுமுடக்கத்தின்போதும் நாங்கள் காடுகளுக்குள் சென்றோம். காடுகளை நாங்கள் மேய்ச்சலுக்காகவும், கச்சு (Collocasia araceae), சட்டு (காட்டுக் காளான்கள்), இலந்தைப்பழம் (Zizyphus mauritania), லாலி விதைகள் (Amoora wallichii King) ஆகிய காடுபடுபொருள்களைச் சேகரிப்பதற்காகவும் நாங்கள் காடுகளைப் பயன்படுத்துகிறோம். காட்டுணவு ஊட்டச்சத்து மிக்கது; பல குடும்பங்கள் பொதுமுடக்கத்தின்போதும் அதன்பிறகும் அவற்றையே சார்ந்திருந்தன. இப்போது உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யவும், வாழ்வாதாரத்தைக் கூட்டவும் எங்கள் கிராமங்களில் கூட்டு விவசாயச் செயல்முறை ஒன்றைத் தொடங்கத் திட்டமிடுகிறோம். புலம்பெயர் தொழிலாளர்கள் பல கிராமங்களில் வீடு திரும்பியுள்ளனர்; கிராமங்களில் வேலைவாய்ப்புக்கும் தட்டுப்பாடாக உள்ளது. கிராம சபைகளில் தன்னாட்சி ஏற்படுத்தி வேலைவாய்ப்பு உருவாக்க முயன்றுவருகிறோம்,"* என்றார்.

1 நர்மதா குஜராத் | 2 கோண்டியா மகாராஷ்ட்டிரம் | 3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர் | 4 துலே மகாராஷ்டிரம் | 5 கட்ச் குஜராத்

PVTG குழுப் பெண்களின் கோவிட்19 நிவாரண அமைப்புகள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம் | 7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம் | 8 தின்டோரி மத்தியப் பிரதேசம் | 9 சாம்ராஜ்நகர் கர்நாடகம் | 10 நயாகர் ஒதிசா

கருப்பொருள்கள்

PVTG சமூகக்குழுக்கள், பெண்கள் தலைமையிலான ஈடுகட்டும் முறைகள், பரப்புரைகள், ஆதரவுக் குழுக்கள்

(இ) காடுகள் நோக்கிச் செல்லும் பைகா பெண்கள்; (வ) கிராமதூத காரியக்ராம் இயக்கக்கூட்டமும், பைகா கிராம சபையும் நடக்கின்றன

பைகா சக்கா அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதி. இங்கு பெரும்பாலும் மிகவும் ஊறுபடத்தக்க பழங்குடிக் குழுக்கள் (PVTG - மி.ஊ.ப.கு.) என்று வகைப்படுத்தப்பட்ட பைகா இனத்தினர் உள்ளனர். உமாரியா, திண்டோரி மாவட்டங்களின் வனப்பகுதியில் 70 கிராமங்கள் உள்ளன. 2008ம் ஆண்டு முதல், கிராமதூத காரியக்ரம், ஜங்கல் ஆத்யாயன் மண்டல் ஆகிய இரு உரிமை-சார் விழிப்புணர்வு இயக்கங்களின் ஆதரவுடன் சமூகக்குழக்கள் வனவுரிமைகளின் அங்கீகரிப்புக்காகப் பணியாற்றிவருகின்றன. இந்த இயக்கத்தின் தொடக்க ஆண்டுகளில், தனிநபர் வனவுரிமைகள் அங்கீகரிக்கப்பட்டபோதும், 2017ம் ஆண்டுமுதலே இந்த இயக்கம் சமூக வனவள உரிமைகளைச் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கச் செய்வதில் கவனம் செலுத்தியுள்ளது. தற்போது, திண்டோரி வட்டத்தில் 10 கிராம சபைகள் தமது சமூக வனவள உரிமைகளைக் கோருவதற்கான ஆவணங்களையும் சாட்சியங்களையும் தயார்நிலையில் வைத்துள்ளனர். இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் முன்னர், பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது.

இந்த இரு இயக்கங்களின் தலைவர்களுள் ஒருவரான பல்வந்த் ரகங்கதாலே, *“மத்தியப் பிரதேசத்தில் சமூக வனவள உரிமைகளுக்கு மிகக்குறைந்த நிறுவன ஆதரவே உள்ளது. சமூகங்களுக்கு நிஸ்தார் உரிமைகளே வழங்கப்பட்டுள்ளன. பழங்குடியினருக்கான அமைச்சகம் கிராம சபைகளுக்கும் அதிகாரம் வழங்கும் ஆவணங்களை வழங்கி, சமூக வனவள உரிமை பெறும் செயல்முறையை எளிதாக்கவேண்டும். மாறாக, வனத்துறை ஆதிக்கம் செலுத்தி, வனவுரிமைச் சட்டத்தையும் அரசியலமைப்பையும் மீறுகின்ற நிலையே உள்ளது. மேலும் கிராம ஊராட்சிகள் கிராம சபைகளைவிட அதிக அதிகாரம் கொண்டவையாக அமைந்துவிடுகின்றன.*

எனவே, திண்டோரி மாவட்டதில், குறிப்பாக பைகா சக்காவின் 22 கிராமங்களில் எங்கள் இயக்கம் சமூக வனவள உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் கிராம தூதர்களின் அணியை உருவாக்கும் பணி செய்துவருகிறோம். மாவட்டத்திலும் மாநிலத்திலும் பல சமூகங்களின் தனிநபர் உரிமைகளும் நிஸ்தார் வனவுரிமைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும், நாங்கள் 10 கிராம சபைகள் தொடங்கி, சமூக வனவள உரிமைகளின் அங்கீகாரத்துக்காக உழைத்துவருகிறோம். நிஸ்தார் உரிமைகள் இருப்பது என்பது வாடகைக்கு ஒரு வீடு எடுப்பது போன்றது; ஆனால் சமூக வனவள உரிமை கொள்வதென்பது அந்த இடத்தை உடைமையாக்கி அங்கு உறைவது போன்றது!" என்றார்.

2009ம் ஆண்டு முதலே, ஓர் இயக்கம் வளர்ந்து வந்துள்ளது. தற்போது, பைகா சக்காவில் 24 கிராமங்கள் தங்களது சமூகக்காடுகளைப் பேணி, நிர்வகித்து, பாதுகாத்து வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் காட்டுத்தீயிலிருந்து காடுகளைக் காப்பது, பிப்ரவரி-மே மாதங்களில் நெருப்புப்பாதைகளை உருவாக்குவது, கிராம சபைகளின் ஒப்புதல் இல்லாமல் மரங்கள் வெட்டுவதைத் தடுப்பது, கிராம சபைக் காடுகளில் அந்நியர்கள் ஆக்கிரமிக்காமல் தடுப்பது, காடுபடுபொருள்களையும் மூலிகைகளையும் சமூகக்குழுக்கள் திரட்டுவதற்கு ஏற்பாடு செய்வது போன்றவற்றின் மூலமாக சமூகக்குழுக்கள் தமது சமூக வனவள உரிமைகளைப் பயன்படுத்துகின்றனர்.

பைகா சக்காவிலுள்ள பல சமூகங்களும் வெளியுலகச் செய்திகளிலுருந்தும் கைபேசி இணைப்பின்றியும் துண்டிக்கப்பட்டுள்ளனர். பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டபோது, அதன் உண்மையான பொருள் குறித்துக் குழப்பம் மிகுந்திருந்தது. அதே சமயம், பல சமூக உறுப்பினர்களும் காடுகளுக்கும், சந்தைகளுக்கும் தினந்தோறும் தமது அன்றாடத் தேவைகளுக்காகச் செல்ல வேண்டியிருந்ததால், முன்னறிவிப்பற்ற பொதுமுடக்கம் மிகக்கடினமாக ஆனது. நகரத்தில் பஜ்கா கிராமத்தினர் காவல்துறையால் அடிக்கப்படுகின்றனர் என்ற செய்திகள் வந்தன; பொதுமுடக்கம் குறித்த அச்சம் மேலோங்கியது.

மார்ச் 24 முதல் ஏப்ரில் 29 வரை, கோவிட்19 பொதுமுடக்கம் குறித்து எந்த தகவல்களும் எந்த ஆதரவும் பைகா சமூகத்தினரை வந்தடையவில்லை. தன்னார்வலர்களும் சுகாதாரப் பணியாளர்களும், ஊராட்சியும் திண்டோரி மாவட்ட ஆட்சியரை ஏப்ரில் 29 அன்று அணுகி அந்த மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரினர். சமூகக்குழுக்களுக்கு மூன்று மாத உணவுப்பண்டங்கள் கிடைப்பதை அவர்கள் உறுதிசெய்தனர்; தனித்திருந்த கிராமங்கள் உடல்நலம் குறித்தும் பொதுமுடக்கம் குறித்த பிற செய்திகளையும் பெற வானொலியும் பிற கருவிகளும் இயக்கத்தால் வைக்கப்பட்டன. தாசில்தார்களோடும் மாவட்ட ஆட்சியரோடும் சமூக மக்களின் பிரச்சனைகளை நேரடியாகத் தெரிவிக்கவும் இந்த இயக்கம் முனைந்தது. மே 15 முதல், புலம்பெயர் தொழிலாளர்கள் கிராமங்களுக்குத் திரும்பியபோது, மக்கள் மாவட்டத் தலைமையிடத்திலேயே தனிமைப்படுத்த வேண்டும் என்று இயக்கம் கோரியது. கிராம சபை மட்டத்தில், சத்திஸ்கர் எல்லையைக் கடந்து வெளியாட்கள் காடுகளின் வழியே நுழைந்துவிடுவார்கள் என்ற அச்சத்தால் தடுப்புகள் போடப்பட்டன.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

PVTG குழுப் பெண்களின் கோவிட்19 நிவாரண அமைப்புகள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

கிராம சபைகளில் பெண்கள் தலைமைத்துவப் பங்காற்றினர். சமூக இடைவெளிக்கான நடைமுறைகளை ஒருங்குபடுத்தினர்:

1. ஓடைகளிலும், கைப் பம்புகளிலும் நீர்க்குழாயிலும் நீர் எடுக்கச் செல்லும்போது கூட்டம் கூடாமல் பார்த்துக்கொண்டனர்.
2. இறப்பு, பிறப்பு, திருமணம் போன்ற நிகழ்வுகளின்போது, சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படுவதைப் பெண்கள் உறுதிசெய்தனர்.
3. பொது நியாயவிலைக் கடைகளில் ஒவ்வொரு கிராமத்துக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவதன் மூலம் கூட்டத்தைத் தவிர்ப்பதைப் பெண்கள் உறுதிசெய்தனர்.

கருப்பொருள்கள்

உள்ளூர் பழங்குடியினர் நிறுவனங்கள், அரசு பொறுப்பேற்புக்கான கோரிக்கைகள், பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வனவுரிமைகள்

(இ) நெல்லிக்காயும் பிற காடுபடு பொருள்களையும் திரட்டுகின்றனர்; (வ) சோலிக சமூகத்தினர் லாண்டானா செடிகளுடன் போராடுகின்றனர்; வனத்துறையினர் பல பத்தாண்டுகளுக்கு முன் நட்ட தேக்கு மரங்களோடு அவையும் வளர்ந்தன.

பிலிகிரி ரங்கசுவாமி கோயில் (BRT - பி.ர.கோ.) புலிகள் காப்பக வனப்பகுதியில் வாழும் சொலிகா சமூகத்தினர் இயற்கையோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளனர். சாம்ராஜ்நகர் மாவட்டத்தில், 2011ம் ஆண்டு, 25 கிராம சபைகளின் சமூக வனவள உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன; பின்னர் மேலும் 10 கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன. தற்போது, 35 கிராம சபைகளில் உள்ள 61 குடியிருப்புகளில் (போதுகள்), 42 குடியிருப்புகளுக்கான சமூக வனவள உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது; 10 குடியிருப்புகளின் உரிமைகோரல்கள் துணை வட்டார அளவிலும், 9 கோரிக்கைகள் கிராம சபை மட்டத்திலும் ஒப்புதலுக்காக உள்ளன.

கொரோனாத் தொற்றும் பொதுமுடக்கமும் பி.ர.கோ.புலிகள் காப்பகத்தின் சோலிகர் சமூகத்தினரின் பழைய அச்சங்களை வெளிக்கொணர்ந்தன - பல ஆண்டுகள் முன்பு அவர்கள் 'மகாமாரி' நோய்களை அனுபவித்துள்ளனர். எனினும், இம்முறையும் மக்களுக்கு கோவிட்19 பற்றியும் அதன் தாக்கம் குறித்தும் புரிதலில்லையாதலால், உள்ளூர் நிறுவனங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தினர். உள்ளூர் சங்கங்கள், ஜில்லா பூதக்கட்டு கிரிஜனா, அபிவிருத்தி சங்கம், தாலுக் சோலிக அபிவிருத்தி சங்கம் மற்றும் பிற மக்கள் மன்றங்கள் கிராம சபைகளுடன் பணியாற்றிப் பொதுமுடக்கத்தை எதிர்கொண்டன.

பொதுமுடக்கத்துக்கு முன்னர், 290 சோலிக தினக்கூலித்தொழிலாளர்கள் பி.ர.கோ.புலிகள் காப்பகத்திலேயோ, குடகு அல்லது அசன் மாவட்டங்களுக்கோ புலம்பெயர்ந்து காபித் தோட்டங்களில் பணியாற்றினர்; சில குடும்பங்கள் தமிழ்நாட்டுக்கோ கேரளத்துக்கோ இடம்பெயர்ந்தனர். இந்த புலம்பெயர் தொழிலாளர்களுக்குப் பொதுமுடிக்கம் அதிர்ச்சியான செய்தியாக வந்தது. காபி தோட்ட முதலாளிகள் அங்கு வேலையை நிறுத்திவிட்டதால் உணவின்றித் தவித்தனர். சோலிக சமூகத்தினர் சங்கத் தலைவர்களை அணுகினர். அவர்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் உணவுப் பண்டங்கள் வழங்குமாறு கோரிக்கை வைத்தனர். முன்னர் மேலும் பல குடும்பங்கள் பிற மாவட்டங்களுக்கும்

மாநிலங்களுக்கும் நான்கைந்து மாதங்களுக்கு வேலைதேடி இடம்பெயர்வார்கள் என்பது குறிப்படித்தக்கது. சமூக வனவள உரிமைகள் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டவுடன், பெரும்பாலான குடும்பங்கள் புலம்பெயர்வதை நிறுத்திவிட்டு, காடுபடுபொருள்களைத் திரட்டுவதில் ஈடுபடத்தொடங்கினர்.

உணவுப் பொருள்களை நீண்ட காலத்துக்குச் சேமித்து வைக்கும் வழக்கம் இல்லாததால் சோலிகர் குடும்பங்களுக்குப் பொதுமுடிக்கம் பெரும் அதிர்ச்சியாக இறங்கியது. சோலிகர் குடும்பங்கள் தினந்தோறும் காடுபடுபொருள்களையும், கிழங்குகளையும், பழங்களையும், கீரைகளையும் திரட்டச் சென்று, தினக்கூலியைக் கொண்டு அன்றைய தினத்துக்கான உணவுப்பொருள்களை வாங்குவர். சங்கத்தின் பழங்குடித் தலைவர்கள் மாவட்ட ஆணையரையும் மாவட்ட பழங்குடி நல அதிகாரியையும் அணுகி ஊட்டச்சத்துமிக்க உணவுப்பொருள்களையும் இலவச அரிசியையும் வழங்குமாறு கோரிக்கையிட்டனர். இது பொதுமுடக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் சமூகங்களுக்கு உணவுப்பாதுகாப்பை அளித்தது; அவர்கள் இவற்றோடு அவர்களே சேகரித்த கிழங்குகளையும் கீரைகளை சேர்த்துக்கொண்டனர்.

தேன் எடுத்தல் அவர்களுக்கு முக்கியமான ஒரு வாழ்வாதாரம். ஏப்ரில் முதல் ஜூலை மாதங்களில் பொதுமுடக்கம் தேன் எடுக்கும் பருவத்தோடு ஒன்றாக அமைந்தது. அப்போதுதான் சமூகத்தினர் காடுகளிலிருந்து தேன் எடுத்து பேரளவுப் பழங்குடியினர் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு (LAMPS) விற்பனை செய்வார்கள். இவ்வாண்டு, பொதுமுடிக்கத்தின்போது, ஒவ்வொரு தேன் அறுவடையாளரும் கிலோவுக்கு 185ரூபாய் பெற்றனர். முகவர்கள் கிலோ 200ரூபாய்க்கு விற்றனர்.

பி.ர.கோ.புலிகள் காப்பகத்திலுள்ள பங்காலே போடுவின் கத்தே கௌடா, *"சோலிக சமூகத்தினர் 28 வகையான காடுபடுபொருள்களை (தேன், பாசிக்காளான், நெல்லி, சீயக்காய்) திரட்டுகின்றனர். எங்களது வருமானத்தில் பாதிக்குமேல் இவற்றிலிருந்தே கிடைக்கிறது. எனது சமூகத்தினரும் நானும் காடுகளுக்குச் சென்று கிழங்குகள், கனிகள், கீரைகள் திரட்டி, எங்கள் பயன்பாட்டுக்கு வைத்துக்கொண்டு. தேனை எடுத்து LAMPSக்கு விற்றுவிடுவொம். அந்த சங்கங்கள் அரசாங்கத்தால் பல பத்தாண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டு, இப்போது எங்கள் பழங்குடியினர் சங்கங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவை எங்களுக்குப் பெரும் ஆதரவாக இருந்துள்ளன. இச்சங்கங்கள் எங்கள் வாழ்க்கைக்கும் வருமானத்துக்கும் பொதுமுடக்க காலத்தில் உதவியாக இருந்தன,"* என்றார்.

சோலிகர் சமூகத்தினர் பொதுமுடக்கித்தின் போது தேனீ அறுவடை செய்தனர்

கருப்பொருள்கள்

காடுகளைக் காத்தல், சமூக வளம்பேணல் மீளுருவாக்கம், காட்டுணவுப் பன்மயம், ஊட்டச்சத்து

(இ) நாதர்பூரைச் சுற்றியுள்ள அடர்காடுகள்; (வ) நாதர்பூர் கிராமத்தின் சித்திரம்

நயாகர் மாவட்டத்தின் நாதபூர் கிராமத்திலுள்ள கோந்த் பழங்குடிச் சமூகம் டாங்கி மலைக் காடுகளை பல பத்தாண்டுகளாகப் பாதுகாத்து வருகின்றனர். ரான்பூர் வட்டாரத்தில், 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காடுகளைப் பேணும் நீண்ட மரபு கொண்டுள்ளனர். இருப்பினும், அவர்களது சமூக வனவள உரிமைகள் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. இப்போதைய காலநிலைச் சீர்கேடு குறித்து பிறர் அறியவரும் முன்னரே நாதபூர் கிராமத்தினர் காட்டின் முக்கியத்துவத்தையும் அவர்களது வாழ்வில் அதன் பங்கினையும் உணர்ந்திருந்தனர்.

உள்ளூர் மர கடத்தல்காரர்கள் அடர்பசுமை மறைப்பை அழித்து கிராமத்துக் காடுகளை வரண்ட இடமாக்கியபோது, 1993ம் ஆண்டு முதல் இச்சமூகத்தினர் காட்டினைப் பாதுகாக்கத் தொடங்கினர். பின்னர், 2004-5ல், நாதபூர், கரடப்பள்ளி கிராமத்தின் சமூக வனப்பகுதிகளில் அந்நிய மரங்களையும் மூங்கிலையும் வளர்ப்பதற்கு வனத்துறை திட்டமிட்டது. வனத்துறையினர் கிராம மக்களின் ஒப்புதலைப் பெறாததால், அவர்கள்மீதாக சந்தேகம் வலுத்தது. ஏற்கனவே நிறைய மூங்கில்கள் இருப்பதாக்கூறி அவர்கள் இத்திட்டத்தை எதிர்த்தனர்: சாலியா (Dendrocalamus strictus), கண்டா (Bambusa bambos) எனப்படுகின்ற இரண்டு மூங்கில்களுமே கிராமத்தில் இருந்தன.

மேலும், எந்தவகையான தீங்கான மனிதத் தலையீட்டையும் கிராமத்தினர் எதிர்த்தனர்; காட்டினை சுழற்சிமுறையில் காத்தனர்; மரபார்ந்த தெங்கப்ள்ளி என்கிற காடுகாவல் முறையைப் பின்பற்றினர். இயற்கையான மீளுருவாக்கத்துக்கும் அவர்கள் வழிகோலினர்: பறவைகளும் பூச்சிகளும் விதைகளைப் பரப்பின; காற்றும் நீரும் வறண்ட நிலங்களுக்கு விதைகளைத் தாங்கிச் சென்றன. மெதுவாக நாட்டு மரங்களும்

இணையான இனவகைகளும் வேர்பிடித்து அடர்ந்த காடு உருவானது. காட்டை அதன்போக்கில் விட்டுவிட்டால் பழைய நிலைக்குத் திரும்பிவிடும் என்பதற்கு நாதபூர் கிராமத்தைச் சூழ்ந்துள்ள காடு ஒரு நல்ல உதாரணம். 2013ம் ஆண்டு முதல், இம்மாவட்டத்தில் 24 சமூக வனவள உரிமைக் கோரல்கள் கிடப்பில் உள்ளன; எனினும் நாதபூர் கிராமம் தனது உரிமைகளைப் பயன்படுத்தி காட்டை நிர்வகிக்கவும் வளம்பேணவும் செய்கிற பல கிராம சபைகளில் ஒன்று.

கோவிட்19 பெருந்தொற்றின்போது, நாதபூர் கிராமத்தினர் உணவு, ஊட்டச்சத்து, வாழ்வாதாரம் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு முன்னுதராணமாக இருந்தனர். மரபு வழக்கமாக, கிராமத்தினர் தங்கள் உணவில் பலவகை காட்டுத்தாவரங்களைச் சேர்த்துக்கொள்கின்றனர். கிழங்குகள், வேர்கள், இலைகள், தளிர்கள், மலர்கள், கனிகள் என்று பலவற்றையும் அன்றாட உணவுப்பொருளாகத் திரட்டுகின்றனர்; உணவுப்பற்றாக்குறை உள்ளபோது அவற்றை உண்ணவும் செய்கின்றனர். அன்றாட உணவிலோ பற்றாக்குறையின் போதோ, இவற்றைப் பச்சையாகவோ, வேகவைத்தோ, வறுத்தோ, அவித்தோ, குழம்பாகச் சமைத்தோ பருப்போடும் அரிசி மாவோடும் சேர்த்து உண்கின்றனர்.

(இ) சாலியா இலைத் தட்டுகள்; (வ) சாலியா இலைத் தட்டுகளைத் தயாரிக்கும் பெண்கள்

நாதபூர் கிராமத்தைச் சேர்ந்த சச்சலா பிரதான் என்ற முதுபெண்மணி, *"பொதுமுடக்கத்தின்போது எங்களது சமூகக்காடுகளிலிருந்து கிழங்குகள், கனிகள், கீரைகள், காளான்கள், மீன்கள் ஆகியவற்றை உண்டிருக்கிறோம். கானுறை சமூகமான நாங்கள் மட்டுமன்றி, ஐம்பது அண்டை கிராமங்களிலுள்ள நெசவாளர்களும் எங்களது காடுகளில் கிடைக்கும் மூங்கிலையும் பிற காடுபடுபொருள்களையும் தங்கள் வாழ்வாதாரத்துக்குச் சார்ந்துள்ளனர். எங்கள் முயற்சியின் பயனை நாங்கள் அனுபவிக்க முடியாமல் போகலாம்; ஆனால் எங்கள் சந்ததியினர் அவர்களுக்கு நாங்கள் செய்து சென்றிருக்கும் பணியை நினைவில் கொள்வார்கள்,"* என்றார்.

பிரமீளா பிரதான், *"கருங்காலி இலைகள், சைலி இலைகள், பிற வணிக காடுபடுபொருள்கள் எங்களில் பலரது வாழ்வாதாரத்துக்கு வழிகோலுகிறது; பெருந்தொற்றுக் காலத்தில் ஒரு சமூகப் பாதுகாப்பு வலையாகவும் செயல்படுகிறது. கால்நடைகளுக்கும் பிற வீட்டு விலங்குகளுக்கு தீவனம் உறுதி செய்வதால் அவற்றுக்கும் எங்கள் காடு இன்றியமையாதது,"* என்றார்.

நோய்ச் சூழலில், நாதபூர் கிராமத்தினர் ஊட்டமிக்க பலவகை உணவினை உண்டுகொண்டு இருந்தனர். பல்வேறு காட்டுத் தாவரங்களில் பேரூட்டச்சத்தும் நுண்ணூட்டச்சத்தும் இருப்பதால் ஊட்டச்சத்துக் குறைபாட்டினையும் அதுசார்ந்த நோய்களையும் களைவதற்கு உதவும் திறன் இவற்றுக்குண்டு. இது சந்தர்ப்ப சாட்சியமாக இருந்தாலும், செடிகளில் பன்மயம் இருந்தால் பலவகை உணவை உண்ணவும் சமூக சுகாதார நலனைப் பேணவும் வழிவகுக்கும் என்பது நிதர்சனம்.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

முக்கியப் பாடங்கள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

வன உரிமைச் சட்டத்தின்படி சமூகக்காடுகளை பயன்படுத்தவும் நிர்வகிக்கவும் வன உரிமைகள் வழங்குவதை அங்கீகரிப்பதன் மூலமாக பல பழங்குடியினத்தினரும் பிற கானுறைவோரும் சிறப்பாகச் செயல்பட்டு கோவிட் பெருந்தொற்றையும் பொதுமுடக்கத்தையும் எதிர்கொள்ள முடுந்திருக்கிறது என்பதை இந்த ஆவணத்தின் நிலை ஆய்வுகள் மூலம் நாம் அறியமுடிகிறது. இந்த செய்திகளிலிருந்தும், இங்கு கூறப்படாத பிற கதைகளிலிருந்தும் சில முக்கிய படிப்பினைகள் தெரிகின்றன:

1. **அதிகாரம் அளிக்கப்படும்போது உள்ளூர் மக்கள் உள்ளூர் சிக்கல்களைப் புரிந்துகொண்டு விரைவாகச் செயல்படமுடியும்**: உள்ளூர் மக்களும் நிறுவனங்களும் ஒரு குறிப்பிட்ட சூழலின் உடனடி உட்சிக்கல்களையும் நீண்டகாலச் சிக்கல்களையும் உள்ளூர் அரசு நிர்வாகத்தைவிட மேலான முறையில் புரிந்து கொள்கின்றனர் என்பது முக்கியப் பாடமாக உள்ளது. இதனால், வனவுரிமைச் சட்டத்தின் மூலம் வனவள உரிமைகள் அங்கீகரிக்கப்படும்போது, சூழலுக்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து, அரசு அமைப்புகளைவிட வேகமாகச் செயல்படுகின்றனர்.
2. **உறுதியான பணிக்காலமும் கிராம சபைகளுக்கு அதிகாரமும் வழங்கப்படும்போது இன்னல்தாழாப் புலம்பெயர்தல் குறைக்கப்படுகிறது**: உறுதியான பணிக்காலம், தனிநபர் உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் அங்கீகரித்தல், பழங்குடியினரையும் பிற கானுறை சமூகங்களையும் அவர்களது மரபார்ந்த காடுகளைத் திறம்பட மேலாண்மை செய்யவும், மீளமைக்கவும், வளம்பேணவும் ஆதரித்தல் ஆகியவை வளங்களுக்கான தளத்தையும், வாழ்வாதாரத்துக்கான பல்வேறு வழிகளையும் உறுதிப்படுத்துகின்றன; அதன்மூலம் இன்னல்தாழாப் புலம்பெயர்தலைக் குறைக்கவோ தடுக்கவோ முடியும். சமூக வனவள உரிமைகளை அங்கீகரித்தல், கிராம சபைகளுக்கு தன்னாட்சி வழங்கல் ஆகியவையும் புலம்பெயர்தலைக் குறைத்து, கிராமங்களிலேயே போதுமான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கின. புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்க்கை மிகவும் ஊறுபடத்தக்கது என்பதாலும் பல சமயங்களில் பொருளாதார அடிப்படையற்றது என்பதாலும் இது ஒரு முக்கியப் படிப்பினையாக உள்ளது.
3. **உள்ளூர் மக்களின் நீண்டகால வளம்பேணல் முயற்சிகளின் விளைவாக ஏற்படும் ஆரோக்கியமான பன்மயம் கொண்ட சூழ்மண்டலங்கள் சமூகங்களின் நெகிழ்வுறுதியை அதிகரிக்கின்றன**: நன்றாக நிர்வகிக்கப்பட்டு, மீளமைக்கப்பட்டு, வளம்பேணப்பட்ட ஆரோக்கியமான பன்மயம் கொண்ட சூழ்மண்டலங்கள் உள்ளூர்ச் சமூகங்களின் தேவைகளை நிறைவேற்ற உதவுவதற்கு, அதிலும் பெருந்தொற்று போன்ற சிக்கலான சமயங்களில், கூடுதல் வாய்ப்பு கொண்டவை. வளம்பேணும் முயற்சிகளும் சமூக வனவள உரிமைகளின் அங்கீகாரமும் கிராம மக்கள் காடுகளை உணவுக்காகவும் பிற தேவைகளுக்காகவும் பொதுமுடக்கத்தின்போது அணுகுவதற்கு உதவியாக இருந்தன.
4. **சூழ்மண்டலம் பேணலுக்கும் மீளமைக்கவும் உள்ளூர் அறிதல் சார்ந்துள்ள உத்திகளும் திட்டங்களும் போது வனத்துறையின் மரநடுதல் திட்டங்களைவிட நெகிழ்வுறுதியை ஏற்படுத்துவதில் செயல்திறம் மிகுந்துள்ளன**: சமூக வனவள உரிமை மேலாண்மைக் குழுக்களால் உற்றநேரத்தில் வழிநடத்தப்பட்டு குஜராத் கட்ச் பகுதியின் பன்னி புல்வெளியில் அமுல்படுத்தப்பட்ட காடுகள் மீளமைப்பும், சமூகக் காடுகள் மேலாண்மைத் திட்டங்களும் அப்பகுதியின் ஆயர்களுக்கும் அவர்களது கால்நடைகளுக்கும் பொதுமுடக்கத்தினால் போக்குவரத்து முடக்கப்பட்ட கடும்

1 நர்மதா குஜராத் | 2 கோண்டியா மகாராஷ்ட்டிரம் | 3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர் | 4 துலே மகாராஷ்டிரம் | 5 கட்ச் குஜராத்

முக்கியப் பாடங்கள்

6 நந்தர்பார் மகாராஷ்டரம் | 7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம் | 8 தின்டோரி மத்தியப் பிரதேசம் | 9 சாம்ராஜ்நகர் கர்நாடகம் | 10 நயாகர் ஒதிசா

கோடைக்காலத்தில் நீரும் ஆகாரமும் கிடைப்பதற்கு வழிவகுத்தன. அத்திட்டங்கள் அந்த தனித்துவமான நிலப்பரப்பின் நீர், மண், காடு, காட்டுயிர் குறித்த உள்ளூர் மல்தாரி சமூகத்தினரின் அறிதலைச் சார்ந்திருந்தன.

5. **வளங்களின் உடைமையும் அதிகாரமும் பெற்றுள்ளபோது உள்ளூர் நிறுவனங்கள் உள்ளூர் தேவைகளுக்காக முதலீடு செய்கின்றன:** காடுகள் மீதான சமூக உரிமைகளும் உடைமையும் கிடைத்து, கிராம சபைக்கும் காடுகளை நிர்வகிக்கவும் பயன்படுத்தவும் அதிகாரம் கிட்டும்போது பழங்குடி சமூகத்தினர் தங்கள் வாழ்வாதாரங்களையும் உணவையும் உறுதி செய்யும் பணிகளிலும், கல்வி, சுகாதாரம் சார்ந்த சமூகநலத் திட்டங்களிலும் முதலீடு செய்கின்றனர். இவ்வுரிமைகளுக்கான அங்கீகாரம் கிராம சபைகள் பெருந்தொற்று போன்ற இடர்ப்பாடுகளைத் தகவமைப்புடன்கூடிய செயல்பாடுகளுடனும் புத்தாக்கங்களுடனும் எதிர்கொள்ள உதவுகின்றன.
6. **காடுபடுபொருள்களின் மீதான உடைமை உரிமைகள் பொதுமுடக்கத்தின்போது தக்கநேரத்தில் மேலான வாழ்வாதார வாய்ப்புகளை உறுதிப்படுத்தின:** காடுபடுபொருள்கள் (இலுப்பை, மூங்கில், கருங்காலி இலைகள் போன்றவை) மீதான உடைமை உரிமைகள் பல குடும்பங்களுக்கும் மிகுதியான வருமானத்தை உறுதிசெய்துள்ளன; கிராம சபை நிதிகளையும் பெருக்கியுள்ளன; இவை மூலமாக வளங்குன்றா பொருளாதாரத்தையும் நெகிழ்வுறுதியையும் உருவாக்கிப் பழங்குடியினருக்கும் பிற கானுறை சமூகங்களுக்கும் மிகவும் தேவையான பொருளாதார ஆதரவை வழங்கியுள்ளன.
7. **உள்ளூர் நிறுவனங்களிடம் வளங்களும் அதிகாரமும் உள்ளபோது சமூகத்தில் மிகவும் நலிந்தவர்களுக்கு அவற்றால் உதவமுடியும்:** கானுறை சமூகங்களில் ஊறுபடக்கூடிய குழுக்களான பெண்கள், குழந்தைகள், நிலமற்ற குடும்பங்கள், ஆயர்கள், குறிப்பாக ஊறுபடக்கூடிய பழங்குடி குழுக்கள் ஆகியோருக்குச் சமூகக் காடுகளிலிருந்து கிட்டிய கூட்டு வளங்களின் மூலம் கிராம சபைகள் எப்படி உதவின என்பதை நிலை ஆய்வுகள் காட்டுகின்றன.
8. **உயிர்ப் பன்மயத்தையும் பயிர் பன்மயத்தையும் பாதுகாத்துப் பேணும் நீண்டகால உத்திகள் சமூகத்தினரை இடர்மிகுந்த சூழல்களில் நெகிழ்வுறுதியுடன் இருக்க உதவுகின்றன:** நாட்டுக் காய்கறிகளை ஊக்குவிப்பது, விதைத் திருவிழாக்கள் நடத்துவது ஆகிய புதுமையான செயல்பாடுகள் மூலம் உயிர்ப் பன்மயத்தையும் பயிர் பன்மயத்தையும் பாதுகாத்துப் பேணும் சமூக உத்திகள் வளங்குன்றா, பருவநிலை பிறழா உள்ளூர் அமைப்புகளை உருவாக்கவும், பெருந்தொற்று போன்ற இடர்மிகு சூழல்களை எதிர்கொள்ளவும் அத்தியாவசியமானவை என்பது கோவிட்19 பெருந்தொற்றின்போது கிட்டிய இன்னொரு முக்கிய பாடம்.
9. **வனவுரிமைச் சட்டமும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் குவிதலும், தனிநபர் வனவுரிமைகளும் சமூக வனவள உரிமைகளும் அங்கீகரிக்கப்பட்ட நிலங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் முயற்சிகளைப் பெருக்குவதும் பழங்குடிப் பகுதிகளில் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த உத்தியாக இருக்கலாம்:** வேலைவாய்ப்புகளை இழந்தது புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் உள்ளூர்ச் சமூகத்தினருக்கும் கோவிட் இடரின்போது மிகப்பெரிய பிரச்சனையானது. நிலத்துக்கும் சமூகக் காடுகளுக்கும் நுழைவுரிமை மூலம் கிராம சபைகளால் சமூக உறுப்பினர்க்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த முடிந்தது; இவ்விடர்க்காலத்தில் மரபார்ந்த முறைகளிலிருந்த கூட்டு சமுதாயப் பணிகளும் மீட்டெடுக்கப்பட்டுச் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

முடிவுரை

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

இந்தியாவில் காடுகளையும் பிற சூழ்மண்டலங்களையும் சார்ந்துள்ள சமூகங்களில் பெரும்பாலனவர்களுக்கு இன்னமும் காடுகளுக்கும் பிற சூழ்மண்டலங்களுக்குமான உரிமைகளும் நுழைவனுமதியும் கிடைக்கவில்லை. அதானல் அவர்கள் சமூக, அரசியல், பொருளாதார, சூழலியல் இடர்பாடுகளுக்கு ஆளாகி, கோவிட்19 பெருந்தொற்று போன்ற சிக்கலான சூழலில் அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் ஊறுபடும்நிலை மேலும் நலிவடைகிறது. இந்தியாவில் (ஐந்து வடகிழக்கு மாநிலங்களும் ஜம்மு காஷ்மீரும் தவிர்த்து) சமூக வனவள உரிமைகள் அங்கீகரிக்கப்படக்கூடிய குறைந்தபட்ச காட்டுப்பகுதி 85.6 மில்லியன் ஏக்கர் (34.6 மில்லியன் ஹெக்டேர்) என்று கணக்கிடப்பட்டுள்ளது. வனவுரிமைச் சட்டத்தின் கீழ் 200 மில்லியன் பட்டியல் பழங்குடியினர்க்கும் (STs), பிற மரபார்ந்த கானுறைவோருக்கும் 170,000 கிராமங்களில் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2016ம் ஆண்டுவரை, சமூக வனவள உரிமைகளின் கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச அளவில் 3 விழுக்காடுதான் எட்டப்பட்டது.

அதே சமயம், மோசமான சிந்தனைகளாலும் ஒதுக்கும்தன்மையாலும் உருவான 'வளர்ச்சி' கொள்கைகளாலும் காடுகள், வனவிலங்குகள், உயிர்ப்பன்மயம் ஆகியவற்றுக்கான வளம்பேணும் சட்டங்களாலும் கொள்கைகளாலும் இயற்கையான வாழ்விடங்களில் பெரும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இயற்கான சூழ்மண்டலங்கள் பெருஞ்சிதைவைச் சந்திக்கின்றன; பல காட்டுயிரினங்கள் அழியும் ஆபத்திலுள்ளன. பருவநிலைப் பிறழ்வால் ஏற்படும் பாதிப்புகள் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன. இப்பாடங்களைக் கருத்தில் கொண்டு சில குறுகிய கால, நீண்டகால நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம்; அவை உள்ளூர் தன்னாட்சியையும் அதிகாரம் வழங்கும் செயல்முறைகளையும் வலுப்படுத்த உதவ வேண்டும்; அத்தகைய செயல்முறைகள் இதுவரை அடையாத இடங்களை எட்டுவதையும் உறுதிசெய்யவேண்டும்.

இதை அடைய எடுக்கவேண்டிய சில உடனடி நடவடிக்கைகள்:

வன உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டம் (FRA.), பட்டியல் பகுதிகளில் ஊராட்சி நீட்டிப்புச் சட்டம் (PESA) ஆகிய சட்டங்களை பிரச்சார வேகத்தில் நடைமுறைப்படுத்தி உள்ளூர் தன்னாட்சி நிறுவனங்கள் முழு அதிகாரம் பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும். கிராம சபைகள், வார்டு சபைகள், பிற உள்ளூர் அமைப்புகள் ஆகியவை அவர்களது வாழ்வையும் ஆதாரங்களையும் பாதிக்கும் எல்லா முடிவுகளிலும் கலந்தாலோசிக்கப்படவேண்டும். முடிவெடுக்கும் உள்ளூர் அமைப்புகளில் விளிம்புநிலைப் பிரிவுகளான பெண்கள், நிலமற்றோர், தலித்கள், நாடோடிச் சமூகங்கள், பழங்குடியினர் போன்றோர் கட்டாயமாகப் பங்குபெறுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

காடுகளும் பிற சூழ்மண்டலங்களும் பிற நோக்கங்களுக்காகத் திருப்பப்படும்போது முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட உள்ளூர் கிராம சபைகளிடமும் பிற நிறுவனங்களிடமும் FRA, PESA ஆகியவற்றின்படி, சட்டப்படியும் சரியான நோக்கத்தோடும் அனுமதி பெற்றுச் (அவற்றை வளைத்தும் மீறியும் செயல்படுவதற்கு மாறாக) செயல்படவேண்டும். முடிவெடுத்தலின் போதும், ஒப்புதல் பெறும் செயல்முறைகளின்போதும் விளிம்புநிலைப் பிரிவுகளான பெண்கள், நிலமற்றோர், தலித்கள், நாடோடிச் சமூகங்கள், பழங்குடியினர் போன்றோரும் சேர்க்கப்பட்டு அவர்களது கருத்துகள் கேட்கப்படுவதற்கான சிறப்பு முயற்சிகள் எடுக்கவேண்டும்.

1 நர்மதா **குஜராத்**
2 கோண்டியா **மகாராஷ்ட்டிரம்**
3 ராஜனந்தகாவ்ன் **சத்திஸ்கர்**
4 துலே **மகாராஷ்டிரம்**
5 கட்ச் **குஜராத்**

முடிவுரை

6 நந்தர்பார் **மகாராஷ்டரம்**
7 அலிப்பூர்துவார் **மேற்கு வங்கம்**
8 தின்டோரி **மத்தியப் பிரதேசம்**
9 சாம்ராஜ்நகர் **கர்நாடகம்**
10 நயாகர் **ஒதிசா**

FRA, PESA ஆகியவற்றின்படி அமைப்புகளின் திறன் வளர்ப்பதையும், பொருளாதார வளங்களையும் பிற வளங்களையும் உருவாக்கவும் உதவுதையும், (உள்ளூர் மற்றும் மரபார்ந்த அறிதல்களைப் பயன்படுத்தி) திட்டமிடலில் சுதந்திரம் தருவதையும், வரவுசெலவுத்திட்டமிடவும் உள்ளூர் நிதிகளையும் வங்கிக் கணக்குகளையும் கையாள்வதையும் எந்த அதிகாரிகளின் இடையூறும் இல்லாமல் உறுதிப்படுத்த வேண்டும். சமூகத் தணிக்கை முறையையும் அமுல்படுத்தவேண்டும். வனத்துறைக்கு மட்டும் நிதி ஒதுக்காமல், CAMPA, MNREGA, TSP ஆகிய திட்டங்களின் கீழ் கிடைக்கும் நிதிகளை FRA, PESAவின்படி கிராம சபைகளுக்கு வழங்க வேண்டும்.

சமூகத்தால் பேணப்படும் பகுதி (CCAs) உட்பட இயற்கையான சூழ்மண்டலங்களை உள்ளூர் சமூகத்தினரே ஆளுகை செய்து, வளங்குன்றாமல் நிர்வகித்து, மீளமைத்து, வளம்பேணுவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும். வனவுரிமைச் சட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவது இத்தகைய முயற்சிகளுக்குச் சட்டப்பூர்வமான வலுவை அளிக்கும். கடலோரங்கள், கடல்பகுதிகள், சதுப்பு நிலங்கள், புல்வெளிகள், பாலைவனங்கள், மலைப்பகுதிகள் போன்ற சூழ்மண்டலங்களுக்கும் FRA, PESA போன்ற சட்டங்களுக்கு இணையான சட்டங்களை இயற்றவேண்டும்.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

குறுக்கம், சொல்லடைவு

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

Compensatory Afforestation (CA) - ஈடுகட்டுவதற்காகக் காடுவளர்ப்பது
இது வனவளம் பேணும் நடவடிக்கை அல்லாத செயல்பாடுகளுக்காக அழிக்கப்பட்ட காட்டு நிலங்களுக்கு ஈடாகக் காடுவளர்ப்பதையும், பிற மீளுருவாக்க நடவடிக்கைகளையும் குறிக்கிறது. வனவுரிமைச் சட்டத்தின்படி, தோட்டமாக்கும் பணிக்கு கிராம சபைகளின் சுதந்திர ஒப்புதலை வனத்துறை முன்பே பெறவேண்டும். சமூகக் காடுகளையும் வளங்களையும் தன்னாட்சி செய்யும் உரிமையை வனவுரிமைச் சட்டம் கிராம சபைகளுக்கு வழங்குகிறது

District Level Committee (DLC) - மாவட்ட அளவிலான குழு
நிலவுரிமைக் கோரல்களுக்கான இறுதி அங்கீகாரத்தை வழங்கி அவற்றைப் பதிவு செய்யும் அமைப்பு.

Farmer Producer Organisation (FPO)- உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்
எல்லா உற்பத்தியாளர்களுக்கும் மேம்பட்ட வருவாயும் சந்தைகளும் கிடைப்பதற்காக விவசாயிகளால் நிறுவனமாகவோ, கூட்டுறவாகவோ அமைக்கப்படும் சட்டப்பூர்வ அமைப்பு.

Federation of Gram Sabhas - கிராம சபைகளின் குழுமம்
கூட்டு நடவடிக்கடிக்கள் எடுக்கவும் ஆதரவு தேடவும் கிராம சபைகள் ஒன்றிணைந்து செயல்படும் அரசியல் பொருளாதார அமைப்பு

Forest Department (FD) - வனத்துறை
ஆங்கிலேயர் காலத்தில் காடுகளை நிர்வகிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அரசுத்துறை. இந்தியக் காடுகள் மீதான கட்டுப்பாட்டினை இத்துறை மூலம் இன்னமும் அரசு செலுத்துகிறது.

Forest Rights Committee (FRC) -வனவுரிமைகள் குழு
வனவுரிமைகளைக் கோரும் செயல்முறைக்காக கிராம சபையால் அமைக்கப்பட்ட குழு.

Forest Villages (FV) - காட்டுக் கிராமங்கள்
காட்டுக் கிராமங்கள் பல காலமாக வனத்துறைக் கட்டுப்பாட்டில் இருந்தவையாகவோ, பழைய குடியிருப்புகளாகவொ, கணக்காய்வில் வராத கிராமங்களாகவொ, காடுகளில் பதிவுசெய்யப்பட்டோ பதிவுசெய்யப்படாமலோ இருக்கக்கூடிய பிற கிராமங்களாகவோ இருக்கலாம். வருவாய்த்துறையின் கீழ் இந்த கிராமங்கள் வராததால், அவற்றுக்கு வெகுசில வளர்ச்சிப் பயன்களே கிடைக்கின்றன. சட்டப்படியான உரிமைகள் பலவும் கிடைப்பதில்லை.

Individual Forest Rights (IFR) - தனிநபர் வனவுரிமைகள்
பழங்குடியினர்க்கும் கானுறைவோருக்கும் (விவசாய) காட்டு நிலங்களில் வாழவும் உழவு செய்யவும் உள்ள உரிமைகளை உள்ளடிக்கியவை.

Joint Forest Management Committees (JFMCs), - கூட்டு வன மேலாண்மை குழுக்கள்
வனத்துறையினரும் கிராம சபை உறுப்பினர்களும் இதில் அங்கம் வகிக்கின்றனர். பல சமயங்களில் வனத்துறையினர் இதில் முடிவெடுப்பதிலும் நிதிகளைப் பயன்படுத்துவதிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். சமூகத்தினரின் பங்களிப்பு பெயரளவிலேயே இருக்கும்.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

குறுக்கம், சொல்லடைவு

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

Large Scale Adivasi Multipurpose Cooperative societies (LAMPS) பேரளவுப் பழங்குடியினர் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்
இவை பழங்குடிச் சமூகங்களுக்குப் பொருளாதார உதவி நல்கிட அரசு ஆதரவு பெற்ற அமைப்புகள். அவர்கள் தமது உற்பத்தியை விவசயாயக் கூட்டுறவுகள் மூதல் வாங்கவும், விற்கவும், கடன்பெறவும், சந்தைப்படுத்தவும் இயலும்

Mahatma Gandhi National Rural Employment Guarantee Act (MGNREGA), 2005 - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம்
இச்சட்டம் கிராம்ப்புற மக்களுக்கு குறிப்பிட்ட அளவு நாள்களுக்கு வேலைவாய்ப்பு உரிமையை வழங்குகிறது.

Ministry of Environment Forests and Climate Change (MoEFCC) - சுற்றுச்சூழல், வனங்கள், பருவநிலை மாற்றம் ஆகியவற்றுக்கான அமைச்சகம்
இது மத்திய அரசில் இந்தியாவின் சுற்றுச்சூழல், காடுகள் சார்ந்த கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து, ஊக்கமளித்து, ஒருங்கிணைத்து, மேற்பார்வையிடுவதற்கான நடுவண் அமைப்பு

Ministry of Tribal Affairs (MoTA) - பழங்குடியினர் அலுவல்களுக்கான அமைச்சகம்
பட்டியல் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான நடுவண் அமைச்சகம். வனவுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் இதனிடமே உண்டு.

Minor Forest Produce (MFP) & Non-Timber Forest Produce (NTFP) - சிறு காடுபடுபொருள்கள், வெட்டுமரமல்லாத காடுபடுபொருள்கள்
வெட்டுமரமல்லாத அனைத்து காடுபடுபொருள்களும் இதில் அடக்கம். இவை பண வருமானத்தையும் வாழ்வாதாரத்தையும் கானுறை சமூகங்களுக்கு வழங்குகின்றன. வனவுரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) (i) 'கிராம எல்லைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் மரபாக சேகரிக்கப்பட்டுவந்த சிறு காடுபடுபொருள்கள் மீதான உடைமை உரிமையையும் அவற்றைத் திரட்டவும், பயன்படுத்தவும், நீக்கவுமுள்ள உரிமையையும்' வழங்குகிறது.

Nistar Rights - நிஸ்தார் உரிமைகள்
முன்பு மன்னராட்சியிலோ ஜமீன்தார் முறையிலோ பிற இடைப்பட்ட ஆட்சிமுறைகளிலோ காடுகளில் நுழையவும் அவற்றைப் பயன்படுத்தவும் வழங்கப்பட்ட சமூக உரிமைகள். நிஸ்தார் உரிமைகளின் பதிவேடுகள் பல மாநிலங்களில் அரசு ஆவணங்களிலும் அறிக்கைகளிலும் கிடைக்கின்றன.

Other Traditional Forest Dwellers (OTFDs) - பிற மரபார்ந்த கானுறைவோர்
பல தலைமுறைகளாக காடுகளில் வாழ்ந்து அவற்றைச் சார்ந்திருக்கும் கானுறைவோர் கானுறைச் சமூகங்களும்.

Panchayat Extension to Scheduled Areas Act, 1996 (PESA) - பட்டியல் பகுதிகளில் ஊராட்சி நீட்டிப்புச் சட்டம் (ப.ப.ஊ.நீ.ச.)
இச்சட்டம் உள்ளூர் பழங்குடியினச் சமூகங்களுக்குத் தங்கள் காடுகள் மீதும் வளங்கள் மீதும் கட்டுபாடு செலுத்தி, மேலாண்மையும் ஆளுகையும் செய்யும் உரிமையை வழங்குகிறது. இயற்கை வளங்கள் மீது மேம்பட்ட கட்டுப்பாடும் நிர்வகிப்பும் பழங்குடியினர்க்கு வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தையும்.

1 நர்மதா குஜராத்
2 கோண்டியா மகாராஷ்ட்டிரம்
3 ராஜனந்தகாவ்ன் சத்திஸ்கர்
4 துலே மகாராஷ்டிரம்
5 கட்ச் குஜராத்

குறுக்கம், சொல்லடைவு

6 நந்தர்பார் மகாராஷ்டரம்
7 அலிப்பூர்துவார் மேற்கு வங்கம்
8 தின்டோரி மத்தியப் பிரதேசம்
9 சாம்ராஜ்நகர் கர்நாடகம்
10 நயாகர் ஒதிசா

வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவதன் மூலம் பழங்குடியினரிடையே ஏழ்மையையும் உணவு உறுதியின்மையையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டையும், புலம்பெயர்தலையும் குறைக்க இச்சட்டம் முயல்கிறது. பழங்குடிச் சமூகங்களுக்கு அவர்களது நிலங்களோடும் காட்டு வளங்களோடும் உள்ள பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தொடர்புகள் அவர்களது அடையாளத்திலிருந்து பிரிக்கமுடியாதவை என்பதை அங்கீகரிப்பதும் இச்சட்டத்தின் முக்கியமான பகுதி.

Particularly Vulnerable Tribal Groups (PVTGs) - மிகவும் ஊறுபடத்தக்க பழங்குடிக் குழுக்கள் (மி.ஊ.ப.கு.)
அமைப்புரீதியாக மிகவும் ஒதுக்கப்பட்டதால் மிக மோசமான வளர்ச்சிக் குறியீடுகள் கொண்டுள்ள பழங்குடியினச் சமூகங்களைக் குறிக்கும் அரசு வரையறை.

Protected Areas (PAs) - பாதுகாக்கப்பட்ட பகுதிகள்
கானுயிர் பாதுகாப்புச் சட்டம், 1972ன்படி, அரசாங்கத்தால் வளம்பேணல் நோக்கத்துக்காக எல்லைவகுக்கப்பட்ட தேசியப் பூங்காக்கள், சரணாலங்கள், வளம்பேணல் காப்பகங்கள், சமூகக் காப்பகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகள். வனவுரிமைச் சட்டத்தின்படி காட்டுநிலம் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகளையும் உள்ளடக்கியது. பழங்குடியினருக்கும், கானுறைவோருக்கும் வனவுரிமைகள் எல்லாப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் பிரிவு 5 கானுயிர்களையும், வனங்களையும், பன்மயத்தையும் பாதுகாப்பதற்கான அதிகாரத்தை கிராம சபைகளுக்கு வழங்குகிறது. அருகிலுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகள், நீர் ஆதாரங்கள், பிற சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் ஆகியவற்றைப் போதுமான வகையில் பாதுகாக்கும் கடமையும் அவற்றுக்கு உள்ளது.

Record of Rights (RoR) - உரிமைகளைப் பதிவுசெய்தல்
வனவுரிமைகளைப் பதிவு செய்வதில் இதுவே கடைசிப்படி. வருவாய்த்துறை, வனத்துறை ஆகியவற்றின் அரசாங்கப் பதிவேடுகளில் உரிமைகள் பதிவுசெய்யப்படுகின்றன.

Reserved Forest (RF) and Protected Forests (PF) - காப்புக் காடுகளும் பாதுகாக்கப்பட காடுகளும்
அரசாங்கம் இக்காடுகள் மீது செலுத்தக்கூடிய வெவ்வேறு நிலையிலான பாதுகாப்பை இந்திய வனச்சட்டம் (1972) வரையறுக்கிறது.

Sub-Divisional Level Committee (SDLC) - துணை-பிரிவு அளவிலான குழு
கிராம சபைகள் முன்வைக்கும் வனவுரிமைக் கோரிக்கைகளை ஆய்ந்து, மாவட்ட அளவிலான குழுவுக்கு இக்குழு அனுப்பிவைக்கும்.

www.vikalpsangam.org

இத்தொகுப்பு சமூக வனவள உரிமைகள் பயில்தலும் ஆதரித்தலும் (CFR-LA), விகல்ப் சங்கம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியில் உருவானது. வசுந்தரா (https://www.vasundharaodisha.org/), கல்பவிருக்ஷ (https://kalpavriksh.org/) ஆகியவற்றின் உதவியின்றி இந்த ஆவணம் சாத்தியப்பட்டிருக்காது.

தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

அதிதி பிண்டோ : vandhikarmedia@gmail.com
ஜூகி பாண்டே : studiojuhi@gmail.com

சமூகத்தினரின் கதைகள் விவரிப்பும் எழுத்தும்: :

கேசவ குர்னுலே, சத்திஸ்கர்;
லலித் பந்தர்க்கர், திலிப் கோடே, நாராயண் சலாமே - கோண்டியா, மகாராஷ்டிரம்;
துருப்தி மேத்தா- நர்மதா, குஜராத் ;
சைத்ராம் பவார் - துலே, மகாராஷ்டிரம் ;
ரமேஷ் பட்டி, இஷா மெரான், ரித்தேஷ் போக்கர், பாரதி நன்ஜர் - கட்ச், குஜராத் ;
பிரதிபா ஷிண்டே - நந்தர்பர், மகாராஷ்டிரம் ;
சௌமித்ரா கோஷ், ஸ்வரூப் சாகா, சுந்தர் சிங் ரவா, லால் சிங் பூஜெல் - ஆலிப்பூர்துவார், மேற்கு வங்கம் ;
பல்வந்த் ரகாங்கடலே, ராகுல் ஸ்ரீவஸ்தவா - மத்திய பிரதேசம் ;
டாக்டர் சி. மாதே கௌடா - சாம்ராஜ்நகர், கர்னாடகம் ;
ஹேமந்த குமார் சாஹூ, நீலமணி மொகபத்ரா - நயாகர், ஒடிசா

அறிமுகம், முக்கிய பாடங்கள், பரிந்துரைகள்

நீமா பதக் ப்ரூமே, துஷார் டேஷ்

சட்ட ஆலோசனைகள்

(from Power to People/Power to Gram Sabha- A Legal Resource Centre document) பூஜா, சங்கமித்ரா துபே

சமூகத்தொடர்பு

ஆதிரா கிருஷ்ணன், அதிதி பிண்டோ, அர்ச்சனா சொரேங்க், சங்கமித்ரா துபே, சர்வேஷ் சதுர்வேதி

எழுத்து, தொகுப்பு, திருத்தங்கள்

Aditi Pinto

சீராக்கம், மெய்ப்புப்பார்த்தல்

அதிதி பிண்டோ, சுஷ்மிதா

தொடர்ச்சி, தளவமைப்பு

ஜூகி பாண்டே

வடிவமைப்பு

நவீத் ததன்

மொழிபெயர்ப்பு

த.கண்ணன்

மேற்கோள் காட்ட: விகல்ப் சங்கம், *சமூக வன உரிமைகளும் பெருந்தொற்றும்: வழிநடத்தும் கிராம சபைகள் - 'சாதாரண* மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்' தொடரின் இரண்டாவது தொகுதி; கோவிட் 19ம் வன உரிமைகளும் - 5ம் அறிக்கை, விகல்ப் சங்கம் மையக் குழு, பூனா, அக்டோபர் 2020

இது காப்புரிமையற்ற பதிப்பு. வணிகநோக்கற்ற செயல்பாடுகளுக்காக யார்வேண்டுமானாலும் தாராளமாகப்பயன்படுத்தலாம். உரிய மேற்கோள்களோடு அங்கீகாரம் கொடுத்தல் நலம். மேற்கோள் காட்டும்போது இதே போல காப்புரிமையற்று இருக்கவேண்டும்.

கிராம சபைகளின் உரிமைகள், பணிக்கால உறுதி, சமூக வன மேலாண்மை ஆகியவற்றை அங்கீகரிப்பதின் மூலம் நெகிழ்வுறுதிகொண்ட சமூகங்களை கோவிட்19ன் போதும் பெருந்தொற்றுக்குப் பிறகும் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக இந்த ஆவணம் CFR-LA, விகல்ப் சங்கம் ஆகியோரின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டது.

இந்த இரு அமைப்புகளும் செய்துள்ள ஆய்வையும் ஆவணப்படுத்துதலையும் குறித்து மேலும் அறிந்துகொள்ள கீழ்க்கண்ட இணைப்புகளைத் தொடரவும்: கோவிட்19ம் வன உரிமைகளும் – அறிக்கை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு

'சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்', தொகுதி 1, மே 2020 (ஆங்கிலம், தமிழ், கன்னடம், இந்தி, மராத்தி, குஜராத்தி, மலையாளம், ஸ்பானிஷ் மொழிகளில் கிடைக்கிறது)
http://vikalpsangam.org/article/extraordinary-work-of-ordinary-people-in-multi-language-translation/#.X6oq1i2B1E4

சித்திர நாவல் வடிவத்தில் மேற்கண்ட ஆவணம்:
http://vikalpsangam.org/article/extraordinary-work-of-ordinary-people-graphic-novel-version/

சமூக வன உரிமைகள் - பயில்தலும் ஆதரவு திரட்டலும் (CFR-LA) செயல்பாடு 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டது. வனவுரிமைச் சட்டம் 2006ன் சமூக வன உரிமைகள் குறித்த பகுதிகளைச் சார்ந்த தகவல்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ள உதவுவதே இதன் நோக்கம். பழங்குடிப் பகுதிகளிலும் பட்டியல் பகுதிகளிலும் நேர்ந்த பரவலான இடர்ப்பாடுகளைப் பற்றிப் பேச கோவிட்19, வனவுரிமை அறிக்கைத் தொடர் தொடங்கப்பட்டது. பெருந்தொற்றின் போது கானுறை சமூகங்களின் குரல்களை மையப்படுத்துகிறது இத்தொடர்..

மேலும் தகவல்களுக்குப் பார்க்கவும்:
http://www.cfrla.org.in/resource.aspx and www.fra.org.in

விகல்ப் சங்கம் நியாயமான, சமநீதி கொண்ட, வளங்குன்றா வழிகளின் மூலம் மனித, சூழலியல் நலம் விழையும் இயக்கங்கள், குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் ஒரு தளம். இது தற்போதைய வளர்ச்சி மாதிரியையும், அதன் அடிநாதமாக உள்ள ஏற்றதாழ்வுகளையும் அநீதியையும் கொண்ட அமைப்பினையும் நிராகரிக்கிறது. நடைமுறையிலும் நோக்கத்திலும் புதிய மாற்றுகளுக்கான தேடலில் உள்ளது. மையக் குழுவில் 60 நாடெங்கிலுமிருந்து அமைப்புகளும் இயக்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். :

மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும்:

http://www.vikalpsangam.org/about/

- ACCORD (Tamil Nadu)
- Alliance for Sustainable and Holistic Agriculture (national)
- Alternative Law Forum (Bengaluru)
- Ashoka Trust for Research in Ecology and the Environment (Bengaluru)
- BHASHA (Gujarat)
- Bhoomi College (Bengaluru)
- Blue Ribbon Movement (Mumbai)
- Centre for Education and Documentation (Mumbai)
- Centre for Environment Education (Gujarat)
- Centre for Equity Studies (Delhi)
- CGNetSwara (Chhattisgarh)
- Chalakudypuzha Samrakshana Samithi / River Research Centre (Kerala)
- ComMutiny: The Youth Collective (Delhi)
- Deccan Development Society (Telangana)
- Deer Park (Himachal Pradesh)
- Development Alternatives (Delhi)
- Dharamitra (Maharashtra)
- Ekta Parishad (several states)
- Ektha (Chennai)
- EQUATIONS (Bengaluru)
- Gene Campaign (Delhi)
- Greenpeace India (Bengaluru)
- Health Swaraaj Samvaad (national)
- Ideosync (Delhi)
- Jagori Rural (Himachal Pradesh)
- Kalpavriksh (Maharashtra)
- Knowledge in Civil Society (national)
- Kriti Team (Delhi)
- Ladakh Arts and Media Organisation (Ladakh)
- Local Futures (Ladakh)
- Maati (Uttarakhand)
- Mahila Kisan Adhikar Manch (national)
- Mazdoor Kisan Shakti Sangathan (Rajasthan)
- National Alliance of Peoples' Movements (national)
- Nirangal (Tamil Nadu)
- North East Slow Food and Agrobiodiversity Society (Meghalaya)
- Peoples' Science Institute (Uttarakhand)
- Revitalising Rainfed Agriculture Network (national)
- reStore (Chennai)
- Sahjeevan (Kachchh)
- Sambhaavnaa (Himachal Pradesh)
- Samvedana (Maharashtra)
- Sangama (Bengaluru)
- Sangat (Delhi)
- School for Democracy (Rajasthan)
- School for Rural Development and Environment (Kashmir)
- Shikshantar (Rajasthan)
- Snow Leopard Conservancy India Trust (Ladakh)
- Social Entrepreneurship Association (Tamil Nadu)
- SOPPECOM (Maharashtra)
- South Asian Dialogue on Ecological Democracy (Delhi)
- Students' Environmental and Cultural Movement of Ladakh (Ladakh)
- Thanal (Kerala)
- Timbaktu Collective (Andhra Pradesh)
- Titli Trust (Uttarakhand)
- Tribal Health Initiative (Tamil Nadu)
- URMUL (Rajasthan)
- Vrikshamitra (Maharashtra)
- Watershed Support Services and Activities Network (Andhra Pradesh/Telangana)